# 3 தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றது

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily
மலர் 8 26-10 66 இதழ் 256

பராபவ ஐப்பசி 10 ஜ. றஜப் 11 புதன்கிழமை

கொழும்பு, செவ்வாய்

நேற்று நடைபெற்ற மூன்று இடைத்தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே வெற்றி பெற்றுள்ளது.

பலாங்கொடை தொகுதியில் 1,740 அதிகப்படியான வாக்குகளினாலும், பண்டாரவளைத் தொகுதியில் 148 அதிகப்படியான வாக்குகளினாலும், பெந்தர - எல்பிட்டியா தொகுதியில் 1,677 அதிகப்படியான வாக்குகளினாலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

## பலாங்கொடைத் தொகுதி

| | |
|---|---|
| திருமதி. மல்லிகா எல்லவல ரத்வத்தை ஸ்ரீ. சு. க. | 14,47[illegible] |
| திரு. மகமத் லெப்பை மரிக்கார் அபுசாலி ஐ. தே. க. | 1273[illegible] |
| திரு. நிவித்திகல பிய[illegible]சா சுயேச்சை. | 338 |
| மேலதிமானவை. | 1740 |

இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர் எண்ணிக்கை: 31,636.

## பண்டாரவளைத் தொகுதி

| | |
|---|---|
| திரு: ஆர்: எம். அப்புஹாமி ஸ்ரீ.[illegible] க. | 8,636 |
| திரு. சீபி. சிறில் மத்தேயு ஐ. தே. க. | 8,4[illegible]8 |
| திரு. ஏ: எம். ஹெரத் சுயேச்சை: | 1,82 |
| மேலதிகமானவை | 1,48 |

இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை: 20,735

## பெந்தறை - எல்பிட்டியா தொகுதி

| | |
|---|---|
| திரு. அல்பேர்ட்காரியவாசம் ஸ்ரீ. சு. க. | 24,132 |
| திரு. கொலின்சமரநாயக்கா ஐ.தே.க. | 22,455 |
| மேலதிகமானவை | 1,677 |

இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர் எண்ணிக்கை: 56,158.

### கடந்த தேர்தலில்

1965-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது பலாங்கொடைத் தொகுதியில் ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சியைச்சேர்ந்த திரு.ஸி. எல் ரத்வத்தை 3,224 அதிகப்படியான வாக்குகளால் ஐக்கிய தேசியக் கட்சியின் அபேட்சகரை தோற்கடித்திருந்தார். அப்பொழுது இவருக்குக்கிடைத்த மொத்தவாக்குகள்: 14,498.

பண்டாரவளைத் தொகுதியில் 1965 ல் நடைபெற்ற பொதுத்தேர்லில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு.ஜே. ஜி. குணசேகரா 1,511 அதிகப்படியான வாக்குகளால் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகரைத் தோற் கடித்திருந்தார். அப்பொழுது அவருக்குக்கிடைத்த மொத்த வாக்குகள்: 7,917.

பெந்தர - எல்பிட்டியா தொகுதிகளில் 65 ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். ஜி. சமரநாயக்கா 1,001 அதிகப்படியான வாக்குகளால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகரைத்தோற்கடித்திருந்தார். அப்பொழுது அவருக்குக்கிடைக்கப்பெற்ற மொத்தவாக்குகள் 22,085.

### போட்டியிட்டவர்கள் விபரம்

பலாங்கொடைத் தொகுதியில் இன்று நடைபெற்ற இடைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகராகப்போட்டியிட்ட திரு. எம். எல். எம். அபுசாலி கடந்த 1965-ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் 1960-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டு தோற்கடிக்கப்பட்டார். ஆனால் திரு அபுசாலி 60-ம் ஆண்டுத்

(5-ம் பக்கம் பார்க்க)

# "மொழிக் கொள்கைக்கு கிடைத்த தோல்வி"

## தேர்தல் முடிவு பற்றி சிறிமா அறிக்கை

கொழும்பு, செவ்

அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும் அதன் திறமைக்கும் அதன்பயங்கர ஆட்சிக்கும் பழிவாங்கும் தன்மைக்கும், நாட்டுமக்கள் தெரிவித்தஎதிர்ப்புதான் மூன்று தொகுதிகளின் உபதேர்தல் முடிவுகளும் காட்டும் உண்மைஎன்றுஎதிர்க்கட்சித்தலைவரும் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சித் தலைவருமான திருமதிசிறிமா பண்டாரநாயகா இன்றுகாலை பலாங்கொடையிலிருந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

மலைநாட்டிலிருந்து தென்னிலங்கை வரையுள்ள மக்கள் அரசாங்கத்தின் கொள்கையை நிராகரித்துவிட்டதையே இத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என்று கூறும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மேலும் குறிப்பிட்டிருப்பதாவது;

தேர்தலில் மக்கள் அளித்த சரியான தீர்ப்பைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன். குறிப்பாக எனது பிறந்த பலாங்கொடைத் தொகுதி மக்களுக்கு எனது நன்றியும் பாராட்டும் உரியது. பலாங்கொடைத் தொகுதியில் இந்நாட்டின் பிரதமரும் அமைச்சர்களும் தங்கள் முழுச் செல்வாக்கையும் பிரயோகித்தனர். நிந்தகநிலங்களை மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்துத் தருவதாகவும் அவர்கள் வாக்குறுதியளித்தனர்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா வாக்களிப்பு நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் சென்றதுடன் பொலிஸ் நிலையத்துக்கும் வாக்களிப்புத்தினத்தில் சென்றுவந்தார். எனினும் அவர்கள் கண்டது தோல்விதான்;

### தோல்விக்குக் காரணம் என்ன?

மூன்று தொகுதிகளிலும் யு என் பி அபேட்சகர்கள் தோல்வி அடைந்ததற்கான காரணமென்ன என்பது பற்றி யு என் பி காரியக் கமிட்டி விரைவில்கூடி ஆராயவிருக்கிறது.

வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியதே இதற்கு முக்கிய காரணமென்று காரியக்கமிட்டி அங்கத்தினர் சிலர் கருதுகின்றனர். வாழ்க்கைச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கத் தவறியவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரவிருப்பதாகத் தெரிகிறது.

---

ஹட்டன்

### பஸ் பிரயாணிகள் கஷ்டம்

கொஸ்லாந்தை, செவ்.

தினந்தோறும் சுமார் 500-க்கு மேற்பட்ட பிரயாணிகள் போக்குவரத்துச் செய்யும் ஹட்டன் பஸ்நிலையம் மிகவும் சிறியதாய் இருப்பதால் மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். பத்துப் பதினைந்து பஸ்களே நிற்கக்கூடிய இப்பஸ்நிலையத்தில் ஒரே நேரத்தில் 20 பஸ்கள் புறப்படுவதற்கு நேரகுசி போடப்பட்டிருக்கிறது'

மஸ்கெலியா, டிக்கோயா அக்கரப்பத்தனை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களுக்கு அரை மணிக்கொருதரம் செல்லும் பஸ்களை நிறுத்தி வைக்கப் போதிய இடமில்லாததால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இதனை நிவர்த்திசெய்ய நடவடிக்கையெடுக்குமாறு மக்கள் ஹட்டன்—டிக்கோயா நகர சபையைக் கோரியுள்ளனர்.

# உப அத்தியட்சகர் நியமனம் மாறாது

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, செவ்.

"இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உப அத்யட்சகராக திரு. ஜே. லக்பிட்ட நவம்பர் மாதம் முதல் திகதி பதவியேற்பது நிச்சயம். இந்தநியமனம் சம்பந்தமாக எனது தீர்மானத்தை பேராசிரியர்களின் எந்தவிதமான ஆட்சேபமும் மாற்ற முடியாது.'

இவ்வாறு கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ, இரியகொல்லை இன்று தெரிவித்தார்.

பேராசிரியர்களின் ஆட்சேபம் பற்றித் தமக்குக் கவலையில்லையென்றும் அவர் சொன்னார்.

# துறைமுக ஊழியர் திடீர் வேலைநிறுத்தம்

கொழும்பு, செவ்

கொழும்புதுறைமுகத்தைச்சேர்ந்த இலங்கைவர்த்தக இப்பந்திகள் யூனியனைச்சேர்ந்தவர்கள். இன்று காலை முதல் வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

இன்று பிற்பகல் 2-30 மணி தொடக்கம் இதர ஸ்தாபனங்களைச்சேர்ந்த வர்த்தகசிப்பந்திகள் சங்க ஊழியர்களும் அடையாள வேலைநிறுத்தம் செய்யவிருந்த துறைமுகத்தைச் சேர்ந்த இந்த ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளும் ஊழியர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் துறைமுகக் கூட்டுத்தாபன உபதலைவர் எச்சரித்ததைத் தொடர்ந்து அவர்கள் இன்று காலையிலேயே வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர்,

### காலதாமதம் எதற்கு?

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையின் உதவி வைத்தியஇதிகாரிவிடுதி இன்னும் ஏன் கட்டப்படவில்லை எனவும் வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டும் அவர்தங்குவதற்கு விடுதியின்மையையும் சுட்டிக்காட்டி கிளிநொச்சி எம். பி திரு. க.பொ. இரத்தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு கடிதம் எழுதினார். அப்பகுதி தலைமை அதிகாரி எழுதியுள்ள பதிலில் காலம் [illegible] வார்?

தீவுப்பகுதி ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம்
கரம்பொன், ஊர்காவற்றுறை

யாழ்ப்பாணம் பிரபல புடவைவியாபாரி திரு B. J. அலோசியஸ் அவர்களின் அன்பளிப்பாக அமைக்கப் பெற்ற திறந்த நோயாளர் விடுதியும் வைத்தியசாலைப் பொறுப்பில் புதிதாக அமைக்கப் பெற்ற 10 அறைகளும், மக்களின் உபயோகத்துக்கென 27-10-66 ல் திறந்து வைக்கப்பெறும்.

மேலும், வைத்தியசாலையில் ஆய்வுகூடமொன்றையும் (Laboratory) விசேட வைத்தியபராமரிப்பு வசதிகளையும் விரைவில் மக்களுக்கு அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**ஸ்ரோர்கீப்பர்:**
ஒரு ஸ்ரோர்கீப்பர் 2 வருட அனுபவமும், ஆங்கில அறிவும் இருக்கவேண்டும். பிணைப் பணம் ரூபா 500/- 28-10-66 காலை 9 மணியளவில் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். மனேஜிங் டைரக்டர், நெல்லியடி இன்டஸ்ரியல் வேக்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1144

**நெசவாளர்:**
வேலணையில் இயங்கிக்கொண்டிருக்கும் நெசவு நிலையத்திற்கு பெண் நெசவாளர் தேவை. விடுதிவசதியுண்டு. விண்ணப்பிக்கவும். சாரிகளுக்குக்குஞ்சம் இணைத்துக் கொடுப்பவர்கள் குழுதல்ஸ் சாறி வேக்ஸ், 24/1, பெரியகடை, யாழ்ப்பாணம் 1448

## விற்பனைக்கு

**கோழிக்குஞ்சுகள்:**
ஒரு நாள் குஞ்சுகள் — ஒரு கிழமைக் குஞ்சுகள் - ஒரு மாசக் குஞ்சுகள் - மூன்று மாசக் குஞ்சுகள் - முற்பணம் வேண்டியதில்லை- தபால் மூலம் பதிவு செய்து கொள்ளவும். அருண ஏஜென்சிஸ், அளவெட்டி. 1422

**சேலைகள்:**
சொந்த தறியில் நெசவு செய்த கைத்தறி சேலைகள் 100, 120-ம் நம்பர் சேலைகளும் சருகை போட்ட சேலைகளும் வேட்டி சாக்லைகளும் மலிவ… விலையில் விற்கப்படு… 17 சப்பல் வீதி, யாழ்… பாணம். 1449

## திருமண அழைப்பு

தியாகராசா சண்முகலிங்கம் கந்தர்மடம் மேற்கு ஒழுங்கை செல்லமுத்து தவமணி தேவி கந்தர்மடம் இந்துமகளிர் வீதி 26-10-66 புதன் இரவு 7 மணியளவில் பழம் றோட் பிள்ளையார் முன்றலில் திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ் அழைப்பை அழைப்பிதழ் ஆக்கி அன்புடன் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம். இங்ஙனம், மணமகனின் பெற்றோர் தியாகராசாவும் பாரியாரும். மணமகளின் தாயார் ஆ. செல்லமுத்து. 1447

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்
தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க விசேஷ பொதுக் கூட்டம் யாழ். வைத்திய சாலை நிலையத்தில் தலைவர் திரு. வ. பண்டிதர் தலைமையில் நடைபெற்றது.

1966—67-ம் வருட புதிய அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். வி. சுப்பிரமணியம், உபதலைவர்: திரு. என். பாலசுப்பிரமணியம், காரியதரிசி: திரு. வ. தெய்வநாயகி, உபகாரியதரிசி திரு. என். பொன்னுத்துரை.

நிர்வாக உறுப்பினர்கள்: திருவாளர்கள் எம். பயினு, ஜே. இம்மானுவல், என். மார்க்கண்டேயர், இ. செல்லத்துரை, ஜி. இராசரத்தினம், சண்முகநாதன், திருமதி நாகேஸ்வரி.

4வது வெற்றி வாரம்!

கிங்ஸலி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடோர்ண் (பண்டாரவளை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தீவொளி (நுவரெலியா) | கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
# பணம் படைத்தவன்

# வானொலி

## கொழும்பு
### புதன் 26-10-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-15 விவசாயச் செய்திகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 விவாதமேடை, 7-15 பாட்டு — இலக்குமி நடராஜன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9-30 பாட்டு — தனலட்சுமி சிவலிங்கம், 10-00 நேயர் விருப்பம்.

## புதிய ஓட்டு தொழிற்சாலை

கொழும்பு, செவ்.
வருடத்துக்கு 30 லட்சம் ஓடுகள் உற்பத்தி செய்யும் ஓட்டுத் தொழிற்சாலை ஒன்று, அம்பிலிப்பிட்டியாவுக்குத் தெற்கேயுள்ள உடவலவ என்னும் இடத்தில் திறவப்படவிருக்கிறது.

இப்பகுதியில் கிடைக்கக் கூடிய களிமண்ணின் தொகை அதிகமாக இருப்பதாலேயே, அங்கு தொழிற்சாலையை நிறுவுமாறு புவியியல் இலாகா சிபார்சு செய்துள்ளதாகத் தெரிகிறது.

## புராணப்படிப்பு

வல்வெட்டித்துறை, செவ்.
செல்வச்சந்நிதி கோவிலில் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் விசேஷ பூசையுடன் புராணப்படிப்பு ஆரம்பமாகியிருக்கிறது. இப்படிப்பு ஏறக்குறைய ஒன்றரை மாதகாலம் வரை நடைபெறும்.

மகாத்மா தியேட்டர்
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
திருவிளையாடல்

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ரஞ்சன் — ராஜசுலோசனா
நடித்த
ராஜ மலேசியன்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
DAY DREAM
(ADULTS ONLY)

REGAL—JAFFNA
NOW SHOWING
ROGER BROWNE
SHILLA GABEL
in
SEVEN SLAVES
AGAINST ROME

# நவராத்திரி விழாக்கள்

உடுப்பிட்டி, செவ்
''மதவழிபாட்டில் சாதிப் பாகுபாட்டுக்கு இடமேயில்லை. மதம் மனிதனை வாழவைப்பது. கல்வி யாவருக்கும் பொதுவானது. கல்வியை எமக்கூட்டும் தாய் கலைமகள். கலைமகளைத் துதி செய்வதன் மூலம் நாம் பேரருள்பெற்றுக் கல்வியும் ஞானமும் பெறலாம்'' என்று பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற சரஸ்வதி பூஜையின்போது சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஃ

உடுப்பிட்டி, செவ்
நெல்லியடி ஐக்கிய கலாசாலையில் சரஸ்வதி பூஜை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செல்வி வேதநாயகியின் கதாப்பிரசங்கமும் நடைபெற்றது.

ஃ

உடுப்பிட்டி, செவ்,
வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி ஆகியவற்றில் நவராத்திரி விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பேச்சுக்களும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஃ

மலாலி, செவ்
யாழ். மாவட்டக் கூட்டுறவுத் துறைமுகத் தொழிலாளர் சமாசத்தால் யாழ்ப்பாணக் கந்தோரில் நவராத்திரிபூஜை கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் துறைமுகத் தொழிலாளர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஃ

சுழிபுரம், செவ்
வழக்கம்பரை அம்மன் கோயில் மண்டபத்தில் சரஸ்வதிவிழாவை மிகவும் கோலாகலமாக வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் கொண்டாடினர்.

ஃ

உடுவில், செவ்
கந்தரோடை சனசமூக நிலைய சைவ இளைஞர் முன்னணியினர் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களும் சரஸ்வதிபூஜையைச் சிறப்பாகக் கொண்டாடினர். மூன்று நாட்களும் சமயப் பிரசங்கங்களும் பக்திப்பாடல்களும் இசைக்கச்சேரிகளும் நடைபெற்றன. மூன்று நாட்களும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

ஃ

சங்கானை, செவ்
சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி கோவிலிலும், கூடத்து அம்பாள் கோவிலிலும் நவராத்திரி தினவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. பலர் இவ்விழாக்களில் பங்குபற்றினர்.

ஃ

சங்கானை, செவ்
சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் கலைமகள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதைத் தொடர்ந்து விஜயதசமி சுபமுகூர்த்தவேளையில் பாடசாலை அதிபர் பண்டிதர் த. மயில்வாகனம் உட்பட மற்றும் ஆசிரியர்களும் அநேக பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் தொடக்கிவைத்தனர்.

ஃ

தொல்புரம், செவ்வாய்
தொல்புரம் அரசினர் அ. மி. பாடசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் துரைச்சாமி தலைமையில் சரஸ்வதி பூஜை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கூட்டுப் பிரார்த்தனையின் பின் திரு. கோ. கிருஷ்ணர் ''தேவியின் மகிமை'' என்னும் பொருள்பற்றிப் பேசினர். பெற்றோர்கள் உட்பட அநேக மாணவர்கள் பூஜையில் பங்கு பற்றினர்.

ஃ

யாழ்ப்பாணம், புதன்
இ. போ. சபையின் வட பிராந்திய இந்து ஊழியர் சங்கத்தினர் கலைமகள்விழாவை பிராந்திய அலுவலக மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடினர்.

திருவாளர்கள் கே. குமாரகுலசிங்கம், ந. நவரத்தினம் என். தணிகாசலம், என். பத்மநாதன் ஆகியோரின் கூட்டுப் பிரார்த்தனையுடன் விழா ஆரம்பமாகியது. திரு. கே. குமாரகுலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. கே. பி. ஹரன் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் திரு சி. க. குலரத்தினம் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி ஞானசிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். இசைநிகழ்ச்சியும் இடம் பெற்றது.

## ஐ. நா. சாதனைகள் பற்றிப் பிரதமர்

கொழும்பு, செவ்வாய்
''ஐ. நா. ஜனநாயகத்தின் ஆகச்சிறந்த பரிசோதனையாகும். அச்சபையில் பெரிய நாடுகளும், சிறிய நாடுகளும் தமது கருத்துக்களை வெளியிடுவதில் சமஉரிமை பெற்றிருக்கின்றன. ஒருநாடு, ஒரு வாக்கு என்ற சமத்துவ வாக்குரிமை நிலையும் அங்கு உள்ளது.

அடிப்படை மனிதஉரிமைகளை நிலைநாட்டுவது, சர்வதேச சட்டங்கள், ஒப்பந்தங்களின் கீழுள்ள கடமைகள், பொறுப்புக்களை அங்கத்துவ நாடுகள் ஆற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவது, சமூக முன்னேற்றத்தை வளர்த்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது ஆகியவை எல்லாம் ஐ. நா. வின் உயர்ந்த நோக்கங்களாகும்.

இந்நோக்கங்களை நிறைவேற்றுவதே ஐ. நா. அங்கத்துவ நாடுகளின் இலட்சியமாகும், ஐ. நா. அதன் 21 வருடகாலத்தில், பல சாதனைகளைப் புரிந்துள்ளது.''

ஐ. நா. வின் 21-வது வருட பூர்த்தி தினத்தையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் பிரதமர் டட்லி சேனநாயகா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவ தாக்குதல் வழக்கு

சாவகச்சேரி, செவ்
1964ம் ஆண்டு ஜூலை 5ந் தேதி இயக்கச்சியில் என். டி. டி. பெர்னாண்டோ கே. பி. சமரசிங்கா, கே. பி. சிடின், டபிள்யு. கே. எம். ரூபசிங்கி ஆகிய 4 இராணுவவீரர்களும் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், அதேசமயத்தில் இராசநாயகம், ஸ்ரனிஸ்டன், முத்தையா, யோஸப் ஆகியோருக்குக் காயம் விளைவித்ததாகவும், எல்லாமாக நான்கு குற்றச் சாட்டுகளைச் சுமத்தித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. வி. எம். குமாரசுவாமி முன்னிலையில் அடுத்த மாதம் 5ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாமிலிருந்து சகல அந்நிய துருப்புகளும் உடனடியாக வெளியேற வேண்டும்

## சுமுகமான தீர்வை மக்களே தீர்மானிக்கட்டும்

### மூவரசுத் தலைவர்கள் வெளியிட்டுள்ள கருத்து

புதுடில்லி, அக். 24

"வட வியட்நாமிலிருந்து அந்நியத் துருப்புகள் யாவும் வெளியேற வேண்டும். 1954-ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தம் அமுலாக்கப்படவேண்டும். வடவியட்நாம் மீதான அமெரிக்கக் குண்டு வீச்சு எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். வியட்நாம் பிரச்னைக்குத் தீர்வுகாணும் எந்த ஒரு முடிவிலும், தென் வியட்நாமிலுள்ள தேசிய விடுதலைப் போராட்ட முன்னணியினரும் பங்குபெற வேண்டும். வியட்நாம் தீர்வை வியட்நாம் மக்களிடமே விட்டுவிட வேண்டும்."

**கூட்டறிக்கை**

புதுடில்லியில் நேற்று முடிவடைந்த மூவரசு மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் வியட்நாம் பிரச்னை பற்றி மேற்கண்டவாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்தியா, ஐக்கிய அரபுக் குடியரசு யூகோஸ்லேவியா ஆகிய நடுநிலைமைநாடுகளின் இம் மாநாட்டில், முறையே பிரதமர் இந்திரா காந்தி, ஜனாதிபதி நாஸர், மார்ஷல் டிட்டோ ஆகிய மூன்று நாட்டுத் தலைவர்களும் பங்கு பற்றினர்.

உலகின் சமாதானத்துக்கு ஏகாதிபத்தியவாதிகளும், நவீன காலனிவாதிகளும் ஏற்படுத்தும் ஆபத்தைவிட்டு மூவரசுகள் தமது கவலையைத் தெரிவித்துள்ளன.

உலக ஆயுத பரிகரணக் கொள்கையைத்தாம் ஆதரிப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற் கொள்ளப்பட வேண்டுமெனவும்மூவரசுகள் தமது கூட்டறிக்கையில் மேலும் தெரிவித்தன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமது மூலதனத்தை தம்மிடையே முடக்க வேண்டுமென்றும், இதன் மூலம் அவர்கள் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த பெரிய நாடுகளின் பயமுறுத்தலுக்கும், பாதிப்புக்கும் ஆளாக வேண்டிய நிலையை முறியடிக்கலாம் என்றும் மூவரசுத்தலைவர்களும் கூறியுள்ளனர்.

பொருளாதார, தொழில்நுட்ப அடிப்படையில் இந்தியா, யூகோஸ்லேவியா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய மூன்று நாடுகளுக்கு மிடையே ஒத்துழைப்பு ஏற்பட வேண்டுமென்ற கொள்கையை மூவரசுத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

**ஐ. நா. வில் வரவேற்பு**

மூவரசுகளின் கூட்டறிக்கையை ஐ. நா. வில் உள்ள ராஜ்யப்பிரதிநிதிகள் பொதுவாக வரவேற்றிருப்பதாக ஐ. நா. விலிருந்து வரும் செய்திகள் கூறியுள்ளன. ஒரு சில ராஜ்யப் பிரதிநிதிகளுக்கு இவ்வறிக்கை அதிக திருப்தி அளிக்கவில்லை எனக் கருதப்பட்டாலும் பெரும்பான்மையான ஐ. நா. ராஜ்யப் பிரதிநிதிகள் அறிக்கையை வரவேற்றுள்ளதாகத் தெரிகிறது.

---

## மாணவர் ஆர்ப்பாட்டங்கள் மத்தியில் மணிலா மகாநாடு ஆரம்பம்

### பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்

### 'அமைதியே நோக்கம்' என்கிறார் ஜோன்சன்

மணிலா, அக். 25

நேற்று வியட்நாம் பற்றி இங்கு கூடிய ஏழு நாட்டு மகாநாடு, வியட்நாம் இராணுவ நிலைமை பற்றிப் பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் இரகசியக் கூட்டமொன்றை நடத்தியது.

மகாநாட்டின் ஆரம்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் மகாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகளின் முக்கிய நோக்கம் பொதுவாக உலகில் சமாதானத்தைப் பாதுகாத்து, அமைதியை நிலைநாட்டுவதேயாகுமெனக் கூறினார். அதே நேரத்தில் அந்நாடுகள் ஆக்கிரமிப்புக்கு இடமளிக்காது எனவும் அவர் கூறினார்.

இம்மகாநாட்டில் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்வியட்நாம், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், தென் கொரியா ஆகிய ஏழு நாடுகள் கலந்து கொண்டுள்ளன.

**கருத்து வேற்றுமை**

மகாநாட்டில் பங்குபற்றும் தென் வியட்நாம் பிரதமர் ஜெனரல் நிகுயென் காவோ கீ, வியட்நாம் பிரச்னையைத் தீர்க்க கௌரவமான சந்தர்ப்பம் ஒன்று வடவியட்நாமியருக்கு விரைவில் அளிக்கப்படுமென வாக்குறுதியளித்தார்.

ஆனால் தென் வியட்நாம் அதிபர் ஜெனரல் வான் தியூ, வியட்நாம் பற்றிய பேச்சுவார்த்தைகள் எவற்றிலும் வியட்காங்கியர் பங்குபற்றுவதை அனுமதிக்க முடியாதென்று கூறியுள்ளார்.

**ஆர்ப்பாட்டமும் துப்பாக்கிச்சூடும்**

நேற்று ஏழு நாட்டுப் பிரதிநிதிகளும் இங்குள்ள ஹோட்டல் ஒன்றில் கூடிய பொழுது வெளியே நூற்றுக் கணக்கான மாணவர்கள் அமெரிக்க-வியட்நாம்கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அமெரிக்க எதிர்ப்புக் கோஷ்டிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவரை பொலிசார் முதலில் தடியடிப்பிரயோகம் செய்து நிறுத்தப் பார்த்தனர். ஆனால் தடியடிப்பிரயோக மூலம் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது போய்விட்டதால், பொலிசார் துப்பாக்கிச் சூட்டில் இறங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 7 தடவை பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

ஏராளமான மாணவர்களும், பொலிசாரும் காயமுற்றனர்.

## சீனாவின் தோல்வி பற்றி ரஷ்யா

மாஸ்கோ, அக். 25

'சீனா தனது வறுமை நிலையை நிரந்தரமாக்கும் கொள்கையைப் பின்பற்றுகிறது.

அது சோஷலிசத்தைத் திரித்துக்கூறிவருகிறது.

சீனக் கம்யூனிசத்துக்கு பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவு கிடையாது.

இக்காரணங்களினால்தான் சீனாவின்கொள்கை தோல்வியடைந்து வருகிறது.'

இவ்வாறு சோவியத் யூனியன் பத்திரிகையான 'பிராவ்டா' குற்றஞ்சாட்டியுள்ளது.

## இந்தோனேஷியாவில் சீனாவின் குறுக்கீடு

ஜாகர்த்தா, அக். 25

சீனா, துருப்புக்களும் பணமும் இந்தோனேஷியாவுக்கு அனுப்பியுள்ளதாக இங்கு வெளியிடப்பட்ட இந்தோனேஷிய இராணுவ அறிக்கை ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது. இது சம்பந்தமாகத் தகவல்கள் கொண்டுள்ளவர்எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்தவருடம் நடைபெற்ற கம்யூனிஸ்ட் புரட்சியில் சீனா உதவி செய்தது பற்றி அறிந்துள்ளதாகக்கூறி, அண்மையில் உயர் ராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். ஆனால் அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

---

## உலக சமாதானத்தை ஐ. நா.வே காக்கும்

### யு. தாண்ட் நம்பிக்கை

ஐ. நா. (நியூயோர்க்) அக். 25

"புதிய அமைதி காக்கும் ஸ்தாபனம் எதுவும் தேவையில்லை. இப்போதிருக்கும் ஐ. நா. வையே மாற்றியமைக்கலாம். அப்படி மாற்றி, உலக சமாதானத்தைப் பாதுகாக்கலாம்."

இவ்வாறு, ஐ. நா. வின் 21-வது வருட பூர்த்தி உரையில், ஐ. நா. பொதுச் சபைக்காரியதரிசி யுதாண்ட் குறிப்பிட்டார்.

"ஐ. நா. இல்லாவிட்டால் உலகத்துக்குப் பல ஆபத்துக்கள் ஏற்பட்டிருக்கக் கூடும்.

உலகில் சமாதானத்தை நிறுவ, ஐ. நா. உறுதியுடன் முன்னேறும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு" என்று அவர் தமது உரையில் மேலும் கூறினார்.

## கிருஷ்ணமேனன் கருத்து

புதுடில்லி, செவ்.

ஐ. நா. வின் 21-வதுவருட பூர்த்தியை முன்னிட்டு இங்கு நடைபெற்ற ஒரு கொண்டாட்டத்தில் பங்கு பற்றிப் பேசுகையில், "ஐ. நா. இன்னும் இயங்கி வருவது மாபெரும் சாதனையாகும். ஆனால், போரைத் தடுக்க வேண்டுமென்ற முயற்சியில் அது வெற்றி பெறவில்லை" என்று குறிப்பிட்டார்.

## பாகிஸ்தானுக்கு சீன ஆதரவு

ஹொங்கொங், அக். 25

சுயநிர்ணயத்துக்காகப் போராடும் காஷ்மீரிகளின் விவகாரத்தில் சீனா பாகிஸ்தானுக்கு ஆதரவு அளிக்குமென சீன வெளி விவகார மந்திரி சென்-யீ இங்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

பீக்கிங்குக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி செய்யது சரூப்தீன் பிர்ஸாதாவுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பங்கு பற்றிப் பேசும் போதே சீன வெளிநாட்டு மந்திரி மேற்கண்டவாறு கூறினார்.

## சுவீடனில மாபெரும் வேலைநிறுத்தம்

ஸ்டொக்ஹோம், அக். 25

சுவிடிஷ் அரசாங்க உத்தியோகத்தரில் மூன்றில் ஒரு பங்கினரான 10,000 அரசாங்கசேவையாளரும், 25,000 ஆசிரியர்களும் நேற்று இங்கு வேலை நிறுத்தம் செய்தனர்.

அண்மையில் அரசாங்கம் ஆசிரியர்களைக் கதவடைப்புச்செய்ததை ஆட்சேபித்தே இம்மூன்று நாள்வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருபது வருடங்களில் சுவீடனில் ஏற்பட்டுள்ள மிக மோசமான தொழில் தகராறுஇதுவே எனக்கூறப்படுகிறது. (பி. டி. ஸி.)

## ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை

டோக்கியோ, அக்25

சீன-சோவியத் கொள்கைப் போராட்டத்தில் ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சி சுதந்திரமானகொள்கையே பின்பற்றும் எனஇங்கு கூடியகட்சியின் 10வது காங்கிரஸ் மகாநாட்டில் 1000 பிரதிநிதிகளிடையே பேசுகையில், கட்சியின் தலைவர் திரு. சாங்கோஸோ நொஸாக்கா தெரிவித்தார்.

பி, டீ. ஸி.

## அடித்துக் காயப்படுத்தியதாக வழக்கு

### தீர்ப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, செல்லம்மாளைச் சேர்ந்த எம். மயில்வாகனம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த ஏ. வல்லிபுரம் என்பவரும் கள்ளிறக்கும் தொழிலாளிக்குக் கடந்த ஆவணி மாதம் முதலாந் தேதி அடித்துக் காயப்படுத்தியதாகப் பருத்தித்துறைப் பொலிஸாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ரூபேர்ட்ஜ்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வல்லிபுரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவம் நடந்த தினத்தன்று மத்தியானம், எதிரி எனது கள்ளு விற்பனைசெய்யும் இடத்துக்கு வந்து கள்ளுத் தரும்படி கேட்டார். நான் இல்லையென்று சொன்னேன். உடனே போய்விட்டு அன்று பிற்பகல் மீண்டும் வந்து எனக்குப் பலமுறை கையினால் அடித்தார். முகத்தில் அடி விழுந்ததும் மூக்கிலிருந்து இரத்தம் ஓடியது. நான் பின்னர் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். ஆஸ்பத்திரியில் வைத்துப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தேன்."

வி. நாகம்மா சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு தீர்ப்பை ஒத்திவைத்தார்.

எதிரி சாரபில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் என். நடராசா, வி. செல்லத்தம்பி ஆகியோர் ஆஜரானார்கள். வழக்காளி சார்பில் வழக்கறிஞர் திரு. வி. பி. சுந்தரலிங்கத்தின் உதவியுடன் பொலிஸார் வழக்கை நடாத்தினர்.

## விளைச்சலை அதிகரிக்கத்திட்டம்

சங்கானை, செவ்.

வார் நெல்விளைச்சல் குறைவாக இருப்பதால் விளைச்சலைப் பெருக்குவதற்கு 'டிக்கி', 'செனு லெற்', 'ஹைபிறட்' போன்ற, ஏழு இன நெல்களை எடுத்துச் சில கமக்காரர்கள் மூலம் விளைச்சலைச் சோதனை செய்துபார்ப்பதற்கு கிருஷிக இலாகா திட்டமிட்டுள்ளது. இதன் நோக்கம் தண்ணீர் குறைந்த இடங்களில் நாலு மாத காலத்தில் மக்கள் அதிக பலன் அடையச்செய்வதே யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வித்யா கர்வமுள்ளவர்கள் பிறருடைய பக்தியைப் பற்றி 'மூடபக்தி' என்றுகூறிஅவர்கள் வழியை 'தப்பு வழி' என்றும்கூறுவர். பக்தன் சிறிதுகாலம் அங்ஙனம் வழிதவறி நடந்திருந்தாலும் பாதகமில்லை; அவனுக்கு என்னவேண்டுமோ அதை ஈசுவரன் சீக்கிரமே கூட்டிவைப்பான்.

—ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box [illegible] JAFFNA.
Telegrams : EELANADU Jaffna Telephone 129

பராபவ ஆண்டு ஐப்பசி மீ 10 (26-10 66)


## இடைத்தேர்தல் முடிவுகள்

'குட்டிப் பொதுத் தேர்தல்' என்று கருதப்பட்டதும் ஆளும்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் நடைபெறும் பலப்பரீட்சை என்று எதிர்பார்க்கப்பட்டதுமான மூன்று தொகுதிகளின் இடைத்தேர்தல்முடிவுகளும் வெளியாகி விட்டன. எதிர்க்கட்சி அபேட்சகர்களே மூன்று தொகுதிகளிலும் வெற்றிபெற்றிருக்கின்றனர். இத் தேர்தல் முடிவுகளைக்கொண்டு ஆளும் கட்சியின் கொள்கைகளுக்குத் தோல்வி கிடைத்து விட்டதாகக் கொள்ளலாமா?

பலாங்கொடை, பண்டாரவளை, பெந்தர-எல்பிட்டிய ஆகிய மூன்று தொகுதிகளுக்குமான இடைத்தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் சென்றஒருமாதகாலமாக இந்த [illegible] தொகுதிகளிலும் [illegible] பிரசாரம் செய்து [illegible]னர். இந்த இடைத்தேர்தல்கள் இருதரப்பினருக்கிடையிலும்நடைபெறும் பலப்பரீட்சையாகவேகருதப்பட்டது. நாடு முழுவதும் இந்தத் தேர்தல்முடிவுகளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது. பெந்தர-எல்பிட்டித் தொகுதியில் மட்டுமே ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஐக்கிய தேசியக்கட்சிக்கும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் நேரடிப்போட்டி இருந்திருக்கிறது. சென்ற தேர்தலின்பின் ஐக்கிய தேசியக்கட்சித் தொகுதியாக இருந்த இத்தொகுதி இப்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குப் போயிருக்கிறது. அதாவது ஏற்கெனவே இருந்த ஒரு ஸ்தானத்தை ஐக்கிய தேசியக்கட்சி இழந்திருக்கிறது. என்றாலும் 1965ம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிஅபேட்சகர் பெற்ற வாக்குகளை விட இந்த இடைத்தேர்தலில் அதிக வாக்குகள் கிடைத்திருக்கின்றன. 1960ம் ஆண்டுப்பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகரை விட ஐயாயிரம் (5,987) அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் இந்தஇடைத் தேர்தலில்ஆயிரம்(1677) அதிகப்படியான வாக்குகள்தான் பெற்றிருக்கிறார். பண்டாரவளை, பலாங்கொடைத் தொகுதிகள் ஏற்கெனவேஎதிர்க்கட்சிக்கு இருந்த ஸ்தானங்கள் இந்த இருதொகுதிகளிலும் சுதந்திரக்கட்சியே இம்முறையும் வெற்றி பெற்றிருக்கின்றது. ஆனால் இந்த இரு தொகுதிகளிலும் சுதந்திரக்கட்சி அபேட்சகர்கள் இம்முறை பெற்ற மேலதிக வாக்குகள் முன்னர் பெற்ற வாக்குகளை விட குறைவானவை. பலாங்கொடைத் தொகுதியில் 1965ம்ஆண்டுத் தேர்தலில் மூவாயிரம்(3,224) அதிகப்படியானவாக்குகளைப் பெற்ற சுதந்திரக்கட்சிஇத்தேர்தலில் ஆயிரம்(1740) அதிகப்படியான வாக்குகளையே பெற்றிருக்கிறது. பண்டாரவளைத் தொகுதியிலும் சென்ற தேர்தலில் ஆயிரம்(1511) அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டிய சுதந்திரக் கட்சிக்குஇம்முறைநாற்று நாற்பத்தெட்டு அதிகப்படியான வாக்குகளே கிடைத்திருக்கிறது. இத்தொகுதியில் இந்தஇடைத்தேர்தலில் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகருக்கு 188 வாக்குகள் கிடைத்திருக்கின்றன. சுயேச்சை அபேட்சகர் போட்டியிடாதிருந்தால் முடிவு வேறாகவும் இருந்திருக்கலாம்.

ஏற்கனவே இருந்த ஒரு ஸ்தானத்தை இழந்ததுடன் இதர இரு தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்துள்ள போதிலும் முன்னைய தேர்தல்களில் கிடைத்த வாக்குகளை விட இம்முறை அதற்கு அதிகவாக்குகள் கிடைத்துள்ளன. எனவே இடைத்தேர்தலில் ஆளும் கட்சி அபேட்சகர்கள் தோல்வியடைந்ததால் அதன் கொள்கைகளையும்சென்றகால நடவடிக்கைகளையும் மக்கள் முற்றாக நிராகரித்து விட்டார்கள் என்று கொள்ள முடியாது. அமைதியான முறையில் தேர்தல் நடந்து முடிந்திருப்பது இங்கு ஜனநாயகம் நிலைபெற்றுள்ள தென்பதையே காட்டுகிறது.

இந்த இடைத் தேர்தல் பிரசாரமும் முடிவுகளும் வகுப்புவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிப்பதாக உள்ளது. இதுவரை தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட எடுத்த முயற்சியை விட இனிமேல்தான் அரசாங்கமும் பிரதமரும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதில் தமிழ்த் தலைவர்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் முக்கிய பொறுப்பும் கடமையும் உண்டு. பெரும்பான்மையினரின் வகுப்புவாத முயற்சிக்கு சிறுபான்மையினர் இடம் கொடுத்து பலியாகி விடக் கூடாது.

### மேலதிக கட்டணம் அறவிடப்படும்

கொழும்பு, செவ்வாய்

கொழும்புதுறைமுகத்திலிருக்கும் பொருட்களை அரசாங்க உத்தியோகத்தர்கள் உரியகாலத்தில் பரிசோதனை செய்து அப்புறப்படுத்தாவிட்டால் அவர்களிடமிருந்து மேலதிகக் கட்டணம் அறவிடப்படுமென திறசேரி அதிகாரிதிரு. வி. எம். பீரிஸ் ஒரு சுற்று நிருபம்மூலம் அறிவித்துள்ளார்.

# உபதேர்தல் முடிவுகள்- -ஒரு கண்ணோட்டம்

## வகுப்புவாதம் மீண்டும் தலைதூக்குமா?

பலாங்கொடை, பண்டாரவளை, பெந்தர-எல்பிட்டிய ஆகிய மூன்று தொகுதிகளினதும் இடைத்தேர்தல்கள் முடிவடைந்து விட்டன. மூன்று தொகுதிகளிலும் எதிர்க்கட்சி அபேட்சகர்களே வெற்றி பெற்றிருக்கின்றனர். எனினும் ஆளும் கட்சியின் பெரும்பான்மை பலம் இந்த முடிவுகளினால் குறைந்துவிடவில்லை. ஜனப்பிரதிநிதிகள் சபையில் இந்த இடைத்தேர்தல் முடிவுகளையும் சேர்த்து ஆளும் கட்சிக்கு 98 ஸ்தானங்களும் எதிர்க்கட்சியினருக்கு 58 ஸ்தானங்களும் உள்ளன. இதில் சபாநாயகர் சேர்க்கப்படவில்லை. கட்சி நிலை வருமாறு:

| | | |
|---|---|---|
| யு. என். பி. | — | 66 |
| தமிழரசு | — | 14 |
| தமிழ்க்காங்கிரஸ் | — | 03 |
| ஸ்ரீலங்கா சுதந்திர சோஷலிஸ்ட் கட்சி (சி. பி. டி. சில்வா) | — | 05 |
| எம். ஈ. பி. (பிலிப் குணவர்த்தன) | — | 01 |
| ஜே. வி. பி. (திருமதி ராஜரத்தினா) | — | 01 |
| சுயேச்சை | — | 02 |
| நியமன அங்கத்தவர் | — | 06 |
| மொத்தம் (ஆளும் கட்சி) | | 98 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | — | 42 |
| லங்கா சமசமாஜக் கட்சி | — | 10 |
| கம்யூனிஸ்ட் கட்சி | — | 04 |
| சுயேச்சை | — | 02 |
| மொத்தம் (எதிர்க்கட்சி) | | 58 |

எனவே ஆளும் கட்சியின் பெரும்பான்மைப் பலம் குறைந்துவிட இடமில்லை. ஆனால் முன்னைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டு சிலர் வெளியேறியதால் அதற்கு நேர்ந்த கதியை மறந்துவிட முடியாது.

உபதேர்தல் நடைபெற்ற மூன்று தொகுதிகளில் பலாங்கொடை, பண்டாரவளை ஆகிய இரு தொகுதிகளும் மலைநாட்டைச் சேர்ந்தவை. பெந்தர-எல்பிட்டித் தொகுதி தென்னிலங்கை (கரையோரப்பகுதி)யைச் சேர்ந்தது. இதில் பலாங்கொடைத் தொகுதி எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயகாவின் (ரத்வத்தை குடும்பம்) பரம்பரைப் பிரதேசம். இத் தொகுதியில் சென்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் தேர்தல் ஆட்சேப மனுமீது நீதிமன்றம் அளித்த தீர்ப்பினால் ஸ்தானம் இழந்த திரு. ரத்வத்தையின் மனைவி இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியிருக்கிறார். சென்ற தேர்தலில் திரு. ரத்வத்தைக்கு கிடைத்த மொத்த வாக்குகள் 14,498 அப்பொழுது கிடைத்த அதிகப்படியான வாக்குகள் 3,224. இந்த இடைத் தேர்தலில் திருமதி ரத்வத்தைக்குக் கிடைத்துள்ள மொத்த வாக்குகள் 14471 அதிகப்படியாகக் கிடைத்த வாக்குகள் 1740. 1960-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் யு. என். பிக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் நடைபெற்ற நேரடிப் போட்டியில் திரு. ரத்வத்தைக்கு 11,201 வாக்குகள் கிடைத்தன. அப்பொழுது 4,124 அதிகப்படியான வாக்குகளால் அவர் வெற்றியீட்டினார். 1960-ல் பலாங்கொடைத் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 22,687. 1965-ல் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 30,050 ஆகவும் இந்த இடைத் தேர்தலில் 31,636 ஆகவும் இருந்தது. 1960-ம் ஆண்டுத் தேர்தலில் யு. என். பி. அபேட்சகர் திரு. அபுசாலிக்கு 7,077 வாக்குகளே கிடைத்தன. 1965-ம் ஆண்டுத் தேர்தலில் 11,274 வாக்குகளைப் பெற்ற அவர் இந்த இடைத் தேர்தலில் 12,731 வாக்குகள் பெற்றிருக்கிறார்.

— எம். ஜி. —

ரத்வத்தை குடும்பத்தின் பரம்பரைப் பிரதேசமாக விளங்கும் பலாங்கொடைத் தொகுதியில் ஒரு பெண் அதுவும் ரத்வத்தை குடும்பத்தைச் சேர்ந்த ஒருபெண் வெற்றி பெற்றிருப்பது ஆச்சரியமல்ல. கொலை செய்யப்பட்ட ஒரு பிரதமரின் மனைவி, அவரும் ஒரு முன்னாள் பிரதமர், அத்துடன் ரத்வத்தை குடும்பத்தையும் சேர்ந்தவர். அவர் தீவிர பிரசாரம் செய்து ஆதரவு தேடியிருக்கையில் அங்கு சுதந்திரக்கட்சி தோல்வியடையுமென எதிர்பார்த்திருக்க முடியாது இத்தொகுதியில் யு. என்பிக்கு இம்முறை அதிகப்படியான வாக்குகள் கிடைத்திருப்பதுதான் ஆச்சரியம். பலாங்கொடைத் தொகுதியைப் பொறுத்தவரையில் அரசியல் கொள்கையை விட குடும்பச் செல்வாக்கும் பெண் என்ற முறையில் பொதுவாக ஏற்படும் அனுதாபமுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு காரணமென்று கருத இடமுண்டு.

### பண்டாரவளை

பண்டாரவளைத் தொகுதியும் 1960-ம் ஆண்டு தொடக்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே இருந்து வந்துள்ளது. 1960-ம் ஆண்டில் 14,106 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்டிருந்த இத் தொகுதியில் நடைபெற நேரடிப் போட்டியில் மொத்தம் 6621 வாக்குகளைப் பெற்ற சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு.ஜே. ஜி. குணசேகரா ஐக்கியதேசியக் கட்சி அபேட்சகர் திரு. எம். டி. ரத்னாயக்காவை விட 2,474 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியிருந்தார். 1965-ம் ஆண்டில் 19 111 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்டிருந்த இத் தொகுதியில் சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு. குணசேகரா மொத்தம் 7,917 வாக்குகளைப் பெற்றதுடன் யு. என். பி. அபேட்சகர் திரு. மத்தியூவைவிட 1,511 அதிகப்படியான வாக்குகளைப்

(5-ம் பக்கம் பார்க்க)

# நாடும் நடப்பும்

டிரிங்...டிரிங்...டிரிங்...

இரவு முழுவதும் 'டெலிபோன்' மணி ஒலித்துக் கொண்டிருந்தது.

''தேர்தல் முடிவுகள்ஏதாவது வந்துவிட்டதா?''

இதே கேள்விதான். அதிகாலைவரை அன்பர்களின் இந்தக்கேள்விகளுக்கு 'ஈழநாடு' உதவி ஆசிரியர்கள் பதிலளித்துக் கொண்டிருந்தனர். இடைத்தேர்தல் முடிவுகளில்தான் பொதுமக்களுக்கு எத்தனை ஆர்வம்; அக்கறை!

தமிழ்க்கட்சிகள் எதுவும் இந்த இடைத்தேர்தலில் அபேட்சகர்கள் எவரையும் நிறுத்தவில்லை. ஆயினும் 'குட்டிப் பொதுத்தேர்தல்' என்று கருதப்பட்ட இந்த இடைத் தேர்தல் முடிவுகளை அறியவும், இத்தேர்தல் முடிவுகள் அரசியலில் மாறுதலை ஏற்படுத்துமா என்ற ஆர்வமும்தான் இதற்குக் காரணம்.

அதிகாலை ஐந்தரை மணிக்குத்தான் கடைசி முடிவுகள் கிடைத்தன. ''மூன்று தொகுதிகளிலும் யு. என். பி.க்குத் தோல்விபோலும். அதனால்தான் முடிவுகளை வெளியிட இவ்வளவு சுணக்கம்'' என்று சில அன்பர்கள் ஹேஷ்யமும் சொன்னார்கள். மிகக் குறைவான 'மெஜாரிட்டி'யுடன் தான் மூன்று தொகுதிகளிலும் அபேட்சகர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர். வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படும்பொழுது குறைவான 'மெஜாரிட்டி'யில் தோல்வியடைவதாகத் தோன்றிய அபேட்சகர்கள் அதைத் திருப்பி எண்ண வேண்டுமென்று கேட்டிருக்கலாம். இதனாலும் முடிவுகள் வெளிவரச் சுணக்கம் ஏற்பட்டிருக்கலாமல்லவா!

எப்படியானாலும் தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடந்து முடிந்திருக்கிறது. தேர்தல் முடிவுகள் வெளிவரச் சுணக்கம் ஏற்பட்டாலும் 'ஈழநாடு' தனது வாசகர்களைஏமாற்றிவிடவில்லை. சுடச்சுட உடனுக்குடன் செய்திகளைக் கொடுத்து வாசகர்களின் அபிமானத்தைப் பெற்றுள்ள 'ஈழநாடு' இந்த இடைத்தேர்தல் முடிவுகளையும் விளக்கமாகக் கொடுத்து வாசகர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறது.

ஃ ஃ ஃ

இடைத் தேர்தல் முடிவுகள்பற்றி அரசியல் தலைவர்கள் இனிமேல்தான் அபிப்பிராயம் தெரிவிப்பார்கள். 'எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி?'. தமிழர்களைப் பொறுத்தவரையில் சென்ற தேர்தலின்பின் இந்தக் கேள்வியில் சிறிது மாறுதல் ஏற்பட்டது. ஆனால் இந்த இடைத் தேர்தலில் நடைபெற்ற பிரசாரமும் எதிர்க்கட்சியினரின் பிரசாரத்தை முறியடிக்க அரசாங்கம் எடுத்த சில நடவடிக்கைகளும்மீண்டும் அதேகேள்வியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இடைத் தேர்தல் பிரசாரமும் முடிவுகளும் மீண்டும் வகுப்புவாதத்துக்கு உயிர் கொடுக்குமா? மூன்று தொகுதிகளிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர்கள் வெற்றிபெற்ற போதிலும் ஆளும் கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் குறைந்துவிடமாட்டாது. ஆனால் ஆளும் கட்சியின் கொள்கையிலும் அதன் போக்கிலும் மாற்றம் ஏற்படுமா என்ற கேள்வி எழுகிறது. இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு இது பெரும் சோதனைக்காலம். தமிழ்த் தலைவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? இனியும் மூலைக்கொருவராய் வக்கரித்துக் கொண்டு தானிருப்பார்களா? ஐக்கியமும் அரசியல் விவேகமும் இனித்தான் மிகமிக அவசியம்.

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உபதேர்தல் முடிவுகள்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

பெற்றுர். இந்த இடைத் தேர்தலில் சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. ஆர். எம். அப்புகாமிக்கு மொத்தம் 8,636 வாக்குகளும் யு.என். பி. அபேட்சகர் சிரில் மத்யூவுக்கு 8438 வாக்குகளும் கிடைத்துள்ளன. இம்முறை சுதந்திரக்கட்சி அபேட்சகர்களுக்கு 148 வாக்குகள் அதிகப்படியாகக் கிடைத்திருக்கின்றன. இத்தொகுதியில் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகருக்கு 182 வாக்குகள் கிடைத்திருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பலாங்கொடையும் பண்டாரவளையும் மலைநாட்டைச் சேர்ந்ததொகுதிகள். இங்கு தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களும் வசிக்கின்றனர். 1947-ம் ஆண்டில் இந்தத் தமிழர்களுக்கு வாக்குரிமை இருந்தது. இப்பொழுது பிரஜாவுரிமை பெற்ற மிகக் குறைவான தமிழர்களுக்கே வாக்குரிமைஇருக்கிறது. 1947-ம் ஆண்டுக்குப் பின்னர் தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களின் வாக்குரிமைகள் பறிக்கப்படாமலிருந்திருக்குமானுல் இப்போதுள்ள சூழ்நிலையில் யு. என். பி. அபேட்சகரே வெற்றியீட்டியிருப்பார். இதுதவிர தமிழ் வாக்குகளைப் பெறவேண்டுமென்பதற்காக எதிர்க்கட்சியினரும் வகுப்புவாத பிரசாரத்திலிறங்கியிருக்கமாட்டார்கள். தேர்தல் பிரசாரம் பொருளாதாரப் பிரச்னையுடன் நின்றிருக்கும்.

தென்னிலங்கையைச் சேர்ந்த தெத்தர-எல்பிட்டித் தொகுதி சென்ற தேர்தலின்பின் யு என். பி.யிடமிருந்தது. இந்த இடைத் தேர்தலில் அது மீண்டும் சுதந்திரக்கட்சிக்குப் போயிருக்கிறது. 1960-ம் ஆண்டில் 41,412 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்டிருந்த இத்தொகுதியில் சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. அல்பர்ட் காரியவாசம் மொத்தம் 18,349 வாக்குகளைப் பெற்றதுடன் யு. என். பி. அபேட்சகர் திரு. ஆர். ஜி. சமரநாயக்காவைவிட 5,987 அதிகப்படியான வாக்குகளைப் பெற்ருர். 1965-ம் ஆண்டில் 52,449 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்டிருந்த இத்தொகுதியில் யு என் பி அபேட்சகர் திரு ஆர் ஜி சமரநாயக்கா மொத்தம் 22,685 வாக்குகளைப் பெற்றதுடன் சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு அல்பர்ட் காரியவாசத்தைவிட ஆயிரத்தொரு வாக்குகள்தான் அதிகப்படியாகப் பெற்றிருந்தார். இந்த இடைத்தேர்தலில் (நேரடிப் போட்டி) பதிவு செய்யப்பட்ட வாக்காளர்தொகை 56,158 ஆக அதிகரித்திருக்கிறது. சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. ஆல்பேர்ட்காரியவாசம் மொத்தம் 24,132 வாக்குகளைப் பெற்றதுடன் யு.என். பி. அபேட்சகர் திரு. கொலின் சமரநாயகாவைவிட 1,677 வாக்குகள் பெற்று வெற்றியீட்டியிருக்கிருர். வாக்காளர்தொகையையும் 1960ம் ஆண்டுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி பெற்ற அதிகப்படியான வாக்குகளின எண்ணிக்கையையும் கணித்துப்பார்க்கையில் சுதந்திரக்கட்சிக்கு இது மகத்தான வெற்றியல்ல.

## கொள்கைப் பிரசாரம்

இந்த இடைத்தேர்தலில் பொருளாதாரப பிரச்னை முக்கிய இடம்பெறவில்லையாயினும் தேர்தல் முடிவுகளுக்கு அதுவும் ஒரு காரணமென்பதை கருத்தில் கொள்ளவேண்டும். மாவின் விலை ஐந்துசதமாக உயர்ந்ததை எதிர்க்கட்சியினர் பயன்படுத்தத் தவறவில்லை. உணவுப்பொருள்களின் தட்டுப்பாடும் விலைஉயர்வும் இந்த முடிவுக்கு ஒரு காரணம். இதுதவிர தேசிய அரசாங்கம், உணவுப்பொருள் தட்டுப்பாட்டையும்ஜவுளித் தட்டுப்பாட்டையும் நீக்குவதற்கு முதலாளிமார்மீது கூசாமல் பதுக்கலை வெளிக் கொணர எடுத்த நடவடிக்கைக்குமுதலாளிமார் சமயம்பார்த்து 'பழி' வாங்கியிருக்கின்றனர் என்றும் சொல்லலாம்.

## வகுப்புவாதம்

தொடம்பே முதலாளியின் கொலே, பழைய அரசாங்க ஊழியர் சிங்களத்தேர்ச்சி பெறவேண்டியதில்லை என்ற திறைசேரிச் சுற்றறிக்கை தமிழரசாரர் யு.என்.பியுடன் பாடு, தமிழ்மொழிச்சட்ட விதிகள், மாவட்டசபை மசோதா, சிங்கள ஆசிரியர் பிரச்னை ஆகியவைகளை எதிர்க்கட்சியினர்தமதுதேர்தல் பிரசாரத்துக்கு முக்கிய ஆயுதமாகப் பாவித்தனர். இவற்றுக்குப் பிரதமரும் ஆளும்கட்சி மந்திரிகளும் பதிலடிகொடுத்தனர். என்ருலும் எதிர்க்கட்சியினரின் பிரசாரம் பழைய வகுப்புவாத உணர்ச்சியை மீண்டும் கிளப்பியது, ஆளுல் பாமர மக்களின் உணர்ச்சியைத் தூண்டக்கூடியதாக இருந்தது. வாக்குகளும் கிடைக்கக்கூடியதாக அந்தப் பிரசாரம் அமைந்தது.

இடைத்தேர்தல் முடிவடைந்து விட்டது. ஆனுல் இந்த இடைத்தேர்தல் பிரசாரமும் அதன் முடிவுகளும் நாட்டின் அரசியலில் ஏற்படக்கூடிய மாறுதல் பற்றி அமைதியையும் தேசியஐக்கியத்தையும் விரும்பும் மக்களுக்கு அச்சமளிப்பதாகஉள்ளது. இதற்குக் காரணமில்லாமலுமில்லை.

1955ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயகா 24 மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சிமொழியாக்குவேன் என்று கூறியதும் அதற்கு நாட்டுமக்களின் ஆதரவு கிடைத்ததால் யு என் பியும் தனது மொழிக்கொள்கையை மாற்றவேண்டுமென்று யோசனை செய்தது. இதன் விளைவாக களனியில் நடைபெற்ற யு. என். பி. மகாநாட்டில் 'சிங்களம் மட்டும்' தீர்மானம் நிறைவேறியது. அதனுல் ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து தமிழர்கள் வெளியேறினர். அதில்ஐக்கியமும் தேசியமும் நீங்கி கட்சி மட்டும் மிஞ்சியது. 1956-ம் ஆண்டுத் தேர்தலில் திரு. பண்டாரநாயகா சிங்களத்துடன் தமிழ்மொழிக்கும் ஓரளவு உரிமை அளிக்கப்படும்என்ற தனது விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். யு. என். பி.யோ அதற்கு ஒருபடி மேலே சென்று சிங்களம் மட்டும் தான், தமிழுக்கு இடமே இல்லையென்று கூறியது. அதன் எதிரொலியாக தமிழ்ப் பகுதிகளில் சம அந்தஸ்துக்குரல் எழுந்தது. 1956-ல் ஆரம்பமான வகுப்புவாதம் 1958-ல் கோர தாண்டவமாடி 1965-ல் தான் சற்றுஓய்ந்தது.

இந்த இடைத்தேர்தலில் எதிர்க்கட்சியினர் வகுப்புவாதப்பிரசாரத்தைத் தொடங்கியதும் அதற்கு ஆளும் கட்சியினரும் தாளம் போடத்தொடங்கினர். சிங்கள ஆசிரியரை வடக்கு, கிழக்குக்கு அனுப்பவிட்டோமென்றும் வடக்கு கிழக்கில் சிங்களம் ஆட்சிபுரிகிறதென்றும் அவர்கள் பதில் பிரசாரம் செய்தனர். இதன் விளைவு தமிழரசுக்கட்சிக்கும் பிரதமருக்குமிடையில் பேச்சுவார்த்தையும் அறிக்கைகளும் [illegible] கைகளுமாக [illegible] குழப்பியிருக்கிறது.

## உண்மையான தேசிய ஐக்கியம

உண்மையான தேசிய ஐக்கியத்தில் தேசிய அரசாங்கத்துக்கு நம்பிக்கையிருக்குமானுல் எதிர்க்கட்சியினர் வகுப்புவாதப் பிரசாரத்தை ஆரம்பித்தபோதும் தேர்தல் வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைகொள்ளாமல் எதிர்க்கட்சியினருக்குப் பதிலடி கொடுத்திருக்க வேண்டும், வகுப்புவாதத்துக்கு இடங்கொடுத்தும் இப்போது தோல்வியைக் கண்டுள்ள ஆளும்கட்சி வகுப்புவாதத்தை எதிர்த்து நின்று தோல்வியை ஏற்றிருந்தால் தேசியஅரசாங்கத்தில் சலசலப்புக்கூட ஏற்பட்டிருக்காது கொள்கையில் உறுதி வேண்டும். இதையே பிரதமரிடம் நாடு எதிர்பார்க்கிறது. சிறுபான்மையினரின் வகுப்புவாதத்தைவிட பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் பேராபத்தானது என்று காலஞ்சென்ற திரு நேருவின்வாக்கு [illegible] வேண்டும்.

# ஒதுக்கப்பட்ட பணம் எங்கே
## கிளிநொச்சி எம்,பி. கேள்வி

யாழ்ப்பாணம், புதன்

பூநகரி நல்லூர் ஆஸ்பத்திரிக்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டபணம் இதுவரை செலவிடப் படவில்லையெனத்தெரியவருகிறது. சென்ற ஆண்டு திருத்தத்துக்காக ஒதுக்கப்பட்ட 600 ரூபா பற்றி கணக்கு எதுவும் காட்டப்படவில்லையெனத் தெரிகிறது.

இந்த வைத்தியசாலைக்கு கடந்த 5 ஆண்டுகளாகஒதுக்கப்பட்ட 3000 ரூபாவில் கட்டிட திருத்தம் எதுவும் செய்யப் படவில்லையென்றும், ஆயிரம் ரூபாவிற்கு மட்டும் கணக்குக் காட்டப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதுபற்றி கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம், அரசினர்வைத்தியசாலை பொதுவேலைப் பணிப்பாளரிடம் விபரம் கோரியுள்ளார்.

# வலிகாமம் கிழக்கு ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

வலிகாமம் கிழக்கு ஆசிரியர்களின் விசேஷ பொதுக் கூட்டம் இம்மாதம் 27-ந் திகதி திரு. க. இ. குமாரசாமி தலைமையில் மாலை 4 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக திரு. ஏ. ஆருளையா கலந்து கொள்கிருர். உரை அரங்கில் திருவாளர்கள் இ. சுந்தையா, வி. தர்மசங்கரி, சி. ஸ்ரீநிவாசன், ச. கதிரவேல், இ. மயில்வாகனம், கி. கதிரவேற்பிள்ளை, ச. பொன்னுத்துரை ஆகியோரும் பங்கு பற்றுகின்றனர்.

# நீரில் மூழ்கி வாலிபர் மரணம்

வல்வெட்டித்துறை, செவ்.

சமரவாகுவைச் சேர்ந்த இராசு சேதுலிங்கம் எஸ். தங்கவேலு ஆகிய இரண்டு வாலிபர்களும் நேற்றுப் பிற்பகல் சைக்கிளில் வல்லைக் கடலுக்கு நீந்தச் சென்றபொழுது இராசு சேதுலிங்கம் என்பவர் தண்ணீரில் மூழ்கி மரணமானுர்.

மரணவிசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரியான திரு. தாமோதரம்பிள்ளை நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

# காஷ்மீரில் கல்லூரிகள் எல்லாம் மூடப்பட்டன
## மாணவர் கிளர்ச்சியின் எதிரொலி

ஸ்ரீநகர், (காஷ்மீர்) அக். 25

மாணவர்களின் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து ஜம்முவிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் காலவரையறையின்றி மூடும்படி காஷ்மீர் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இம்மாணவர்கள் அண்மையில் தமது சகாக்களில் ஐந்துபேரைப் பொலிசார் சுட்டுக்கொன்றதை எதிர்த்தே இவ் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். கடந்தமாதம் இந்தியாவில் நடைபெற்ற இத்தகைய மாணவர்கிளர்ச்சிகளில் பல மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்மீது துப்பாக்கிப் பிரயோகம்செய்ய உத்தரவிட்ட பொலிஸ் அதிகாரிகள் தமது பதவிகளிலிருந்து நிறுத்திவைக்கப் படும்வரை தமது வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து நடாத்துவதாக மாணவர்கள் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரிக்க கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆனுல் விசாரணையைத் தாம் பகிஷ்கரிப்பதாக மாணவர்கள் நேற்று இங்கு அறிவித்தனர்.

இதற்கிடையில், கிளர்ச்சிகளின் பின் ஜம்முவுக்கு அழைக்கப்பட்ட இராணுவ பிரிவினரிடமிருந்து சிவில் அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

# பொலிஸ் தாக்குதலுக்கு சமசமாஜ(புரட்சி)கட்சிகண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

சென்ற வெள்ளிக்கிழமை சுன்னுகத்திலிருந்து தமது பொது உரிமைகள் கோரிச் சமாதான முறையில் ஊர்வலம் வந்த சிறுபான்மைத் தமிழரை பொலிஸ் படையினர் தாக்கியதை புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இவ்வாறு புரட்சிவாத சமசமாஜக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளை சென்ற வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காலாகாலமாகத் தாழ்த்தப்பட்டுப் பொது உரிமைகளை இழந்தவர்கள், இன்று அதே உரிமைகளைத் தரவேண்டுமென்று தலைநிமிர்ந்து கோரும் குரலை அணைத்துவிடுவதற்காக அவர்களின் உரிமைப் போராட்டத்தை அரும்பிலே கிள்ளிவிடுவதற்காக நூற்றுக்கணக்கான பொலிஸ்படைஆயுதபாணிகளாகச் சுன்னுகம் வந்தனர்.

ஒடுக்கப்பட்டவர் எழுந்து போராடினுல் அடக்குமுறைகளைச் சிதறிபடிக்கலாம். பொலிசார் அவர்களைமோசமாக அடித்தபோதிலும் ஊர்வலம் குலையவில்லை. முற்றவெளிக்குப் போய்க் கூட்டம் வைத்தார்கள். இது சிறுபான்மைத் தமிழரின் முதலாவது வெற்றி.

மேலும் பொலிசாரின் அடி சிறுபான்மைத் தமிழருடைய கண்களைத் திறந்து விட்டது. இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு அரசாங்கமே உதவி அளிக்கும் என்பது வெறும் மாயை என்று இனி விளங்கும்.

தமிழரசோ, தமிழ்க்காங்கிரஸோ சிறுபான்மையினரது உரிமைகளைப் பெற முயலுங்கட்சிகளாயின் அவர் கூடியிருக்கும் தேசிய அரசாங்கம் பொது உரிமை கோரும் சிறுபான்மை மக்களை பொலிஸ் படையால் அடக்குவதேன்?

புரட்சிமுறையில் போராடினுலன்றி மனித உரிமைகளை ஒடுக்கப்பட்டவர் உரிமை பெறமுடியாது, சரித்திரம் கற்பிக்கும் பாடம் இது. சென்ற வெள்ளிக்கிழமை சுன்னுகத்தில் நிகழ்ந்தவற்ருல் இது வெளிப்படையாகும்.

# 3 தொகுதிகளிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலிலும்பார்க்க 1965ம் ஆண்டுத் தேர்தலில் சுமார் ஆயிரம் குறைந்த மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்[illegible]ருந்தார். திரு ரத்வத்[illegible]ன் மனைவி இம்முறை[illegible] முதற்தடவையாக போட்டியிட்டார். இவர் கடந்த ஆறு வருடங்களாக அரசியலில் தீவிர பங்கு கொண்டிருந்தார்.

பண்டாரவளையில் 1960-ம் ஆண்டில் போட்டியிட்ட எவரும் இம்முறை போட்டியிடவில்லை. ஆனுல் 1965-ல் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிட்டு சுமார் 1,500 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட திரு. சிறில் மத்தியூ இன்று நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டார்.

தெத்தர-எல்பிட்டிய தொகுதியில் ஐ. தே. கட்சிக்கும் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்குமிடையே நேரடி 'மோதல்' ஏற்பட்டிருக்கின்றது. கடந்த பத்து வருடங்களாக அரசியலில் ஈடுபாடுகொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகர் திரு. அல்பேட் காரியவாசம் 1960—1965 பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டவர் 1960-ல் ஐ. தே. கட்சி அபேட்சகரை 5,987 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டிய இவர் 1965 தேர்தலில் 1,001 வாக்குகளால் ஐ. தே. கட்சி அபேட்சகரால் தோற்கடிக்கப்பட்டிருந்தார்.

# அதிக டயர்கள் இறக்குமதி

கொழும்பு, செவ்வாய்

வர்த்தக வாகனங்களுக்கென டயர், டியூப்புகள் இறக்குமதி செய்ய அரசாங்கம் 90 லட்சம் ரூபா விடுவித்துள்ளது. இத்தொகை கடந்த வருடத்தில் விடுவித்ததிலும் பார்க்க இரண்டு மடங்காகும்.

# புதிய பஸ் சேவை

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சியிலிருந்து-இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயம்மட்டும் அடுத்த மாதந்தொடக்கம் ஒரு பஸ்சேவை நடாத்தப் படவிருக்கிறதென தெரியவருகிறது.

இப்பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டால் இரணைமடு கனகாம்பிகை அம்மன் கிராம விஸ்தரிப்புத் திட்டக் குடியேற்ற வாசிகள் பிரயாணம் செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்குமெனவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையர் மன்றம்

## ஆடவர்களே நீங்களும் அலங்கரியுங்களேன்!

— 'பூரணி' —

ஆண் மயில்தான் அழகானது. பேட்டுக் கோழியைவிடச் சேவல்தான் அழகானது. பெண்சிங்கத்தைவிட ஆண்சிங்கம்தான் அழகானது. இப்படியே பறப்பன, நடப்பன, ஊர்வன எல்லாம் ஆண்வர்க்கம்தான் அழகாம். மானிடவர்க்கத்திலும் அப்படித்தானும். ஆனால் இந்தப் பெண்கள் பொல்லாத தந்திரத்தால் ஏழு வர்ணச் சேலைகளாலும் எண்ணற்ற நகைகளாலும் தங்களை அழகிகள் போல் ஆக்கிக் கொள்கின்றனராம். இப்படி ஒருசார் ஆண்வர்க்கம் ஆர்ப்பரிக்கிறது. அடிப்படை, கலாநிதி மலலசேகராவின் பேச்சாகும்.

பெண்கள் மட்டும்தான் ஏழ்வகை நிறங்களில்வண்ண வண்ணப் பூப்போட்டசேலைகளையும் ரவிக்கைகளையும் அணிய வேண்டுமென்று என்ன சட்டம் இருக்கிறது என அண்மையில் அவர் ஆக்ரோஷத்துடன் வினவியிருக்கிறார். பெண்களுடன் உ[illegible]யில் நகையில் மட்[illegible]ா ஆண்கள் போட்டி போ[illegible]டுகிறார்கள்? அவர்க[illegible]து போட்டி மனப்பான்மை வரவர விசிவடைந்து வருகிறது. பெண்டாக்டர்களுக்கு இருக்கும் சில சலுகைகள் நீக்ப்பட வேண்டும் என்கின்றனர் ஆண் டாக்டர்கள். பஸ்ஸில், புகையிரதங்களில் பெண்களுக்கு ஏன் இடம் ஒதுக்குவான்? அவர்கள் எல்லாவற்றிலும்தானே நம்முடன் சரிநிகர் சமானமாய் போட்டி போடுகின்றனர் என்கிறது சோர்வுற்ற ஒருபகுதி ஆண்வர்க்கம்.

இடைக்காலத்தில் ஆண்வர்க்கத்தால் அடக்கி ஒதுக்கப்பட்ட பெண் இனம் இன்று உயர்கல்வி பெற்று ஒப்பற்ற சமுதாயம் அமைக்க ஆர்வமுடன் புறப்பட்டிருக்கின்றது. அது பலதுறைகளிலும் மின்வேகத்தில் முன்னேறுகின்றது. பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் பல நங்கையர்களுக்கு இடம் கிடைத்துள்ளது. இதைக் கண்டு ஆண்களே அச்சம் அடையாதீர்கள். உங்களது தாய்க்குலத்தை வளமாக்குவதில் உங்களுக்கும் பெரும் பங்கு உண்டல்லவா? பெண்களின் பலதுறை முன்னேற்றம், உங்கள் வளர்ச்சியைச் சிறிது தடை செய்தாலும் அதற்குக் கவலையுறாது கவிஞர் பாரதியார் போன்று அவர்களுக்குக் கை கொடுத்து மேலும் ஊக்கமளியுங்கள்.

சகோதரர்களே! நங்கையர் போன்று நீங்களும் இன்று வண்ண வண்ணப் பூப்போட்ட பற்றிக்சாரங்கள், சருகைக் கரைபோட்ட பட்டு வேட்டிகள், ரெரின், நைலோன், பூச்சேட்டுகள், கழுத்திற்கு பெரிய நீளச் சங்கிலிகள், கைக்குத் தங்கச் சங்கிலி பூட்டிய கடிகாரங்கள், குறைந்தது நான்கு ரவிலாவதுவைரக்கல் பூட்டிய தங்க மோதிரங்கள், இவையெல்லாம் அணிகிறீர்களே, இவைகளெல்லாம் அணிவது அழகிற்கு அழகு செய்யவோ! தாராளமாக இன்னும் வண்ண வண்ணச் சேலைகளைக் கட்டி வடிவான கொண்டைகளையும் போடுங்கள். தாராளமாக எல்லாவற்றிலும் பெண்களுடன் போட்டி போடுங்கள். உங்களது பரந்த போட்டி மனப்பான்மை உங்களுக்கு மட்டுமன்றி எங்களது வளர்ச்சிக்கும் அல்லவா மிக்க பயன்படுகிறது. உயர்ந்த குறிக்கோளிற்காக ஏற்படும் போட்டி மனப்பான்மை சமுதாயத்திற்கு நன்மையையே தரும்.

## சிக்கனம் வேண்டாமா!

○சிக்கனம்! அதுவும் ஒரு விதவருமானம்—செனிக்கா

○ சிக்கனம் இல்லையேல் யாரும் செல்வராக முடியாது. சிக்கனம் இருந்தால் சிலர் கூடவறியவர் ஆகார். —ஜான்ஸன்

○ தந்தை மகற்காற்றும் உதவி அதிகம் வைத்துப் போவதன்று, இருப்பதைக் கொண்டு சரியாக வாழக் கற்பதே —பென்

○ சின்னஞ்சிறு செலவுகளைப் பற்றிக் கவனமாயிருங்கள். அடித்தளத்தில் உள்ள சிறு ஓட்டை கப்பலையே கவிழ்த்துவிடும் —பிராங்கிளின்

○ சிக்கனமாயிரு ஆனால் கருமியாயிராதே —கி. ஆ. பெ. விசுவநாதம்

○ பணம்கிடைத்தாலன்றி பணத்தை செலவு செய்ய வேண்டாம். மலிவென்று வேண்டாதது எதையும் வாங்காதீர் —ஜெபர்சன்

○ சிக்கன வாழ்வைக் கடைப்பிடிக்காதவன் திறமைசாலியாக இருக்க முடியாது. குடித்தனம்நடத்தவும் முடியாது. —பீகன்ஸ் பீல்டு

○ பொருள் தேடல் என்றால் உழைத்துப் பணம் சேர்ப்பது மட்டுமல்ல. சிக்கனமாயிருந்து கையில் உள்ளதைகூடுமானவரை செலவு செய்யாமல் இருப்பதும் பொருள் தேடலே —ஸிஸரோ

○ வருவாயைவிடக் குறைவாகச் செலவுசெய்ய அறிந்துவிட்டால் இரசவாத இரகசியத்தை அடைந்துவிட்டவராவோம். — பிராங்க்ளின்.

○ சிக்கனமாயிருத்தல் வாழ்வாகிய போர்க்களத்தில் பாதி வெற்றி பெற்றது போலாகும். —ஸ்தே.

○சமூக மறுமலர்ச்சிக்கு சிக்கனவாழ்க்கையைவிட சிறந்தவழி வேறில்லை. நிலையான அமைதி நிறைந்த பெருவாழ்வுக்கும் தனிமனிதன் சிக்கனம் இன்றியமையாதது —கால்வின் கூலிட்ஜ்

○ மற்றவர்களுக்கு எவனொருவன் வழிகாட்டியாய் இருக்க விரும்புகிறானே அவன் எளிய வாழ்க்கையையே கடைப்பிடிக்க வேண்டும். —ரூஸோ.

—டாக்டர் ஜான்சன்.

தொகுப்பு: இ. பேர்ணுட்.

சிறுகதை

## எண்ணியது தவறு?

— செல்வி குண. வி நடராஜா —

மலரின் ஆத்திரமெல்லாம் அடுக்களையிலுள்ள அலுமினியப் பாத்திரங்களின் "ணங்" என்ற ஓசை மூலம் வெளிப்பட்டது.

அப்பா, அம்மாவை பொருள் நிறைந்த புன்னகையுடன் பார்த்தார், அம்மா அதைப் புரிந்து கொண்டு அர்த்த புஷ்டியுடன் அண்ணுவைப் பார்த்தாள். ஆனால் அசட்டு அண்ணுவோ "மலர் இதற்கு சம்மதிப்பாள்; இல்லையா அம்மா?" என்றான்.

அவளுடைய பதிலைத்தானே அடுக்களையிலுள்ள அலுமினியப் பாத்திரங்கள் சொல்கின்றன என்றார் அனுபவமிக்க அப்பா. அதைப் புரிந்துகொண்ட அண்ணு கன்னத்தைத் தடவிக்கொண்டான்.

மாலை நாலு மணி துள்ளிக்கொண்டு ஓடிவந்த கௌரி மலரின் வாடிய முகத்தைக் கண்டதும் பதறி நின்றாள். பின்னே என்ன? நல்ல "பசை"யுள்ள இடத்திலே கல்யாணம் பேசி, ஜாதகம், கேட்டுள்ளார்கள். மாப்பிள்ளை பெரியகடையொன்றின் சொந்தக்காரனும். ஏராளம் சொத்துப் பத்து! அப்படியிருக்க மலரின் மலர்முகம் வாடுவதென்றால்...?

மலரை அழைத்துக் கொண்டு கிணற்றடிக்கு வந்தாள் கௌரி. அவள்தான் மலரின் உயிர்த் தோழி. மணமானவளானாலும் மலரின் மனமறிந்து நடப்பவள்.

"என்ன மலர் எங்கோ பேச்சு நடக்குது போலே?"

"ம்ஓம்" வானத்தைப் பார்த்தபடி பதிலளித்தாள் மலர்.

"ஏன் மலர், உனக்கு இந்தச் சடங்கு பிடிக்கலையோ?"

பெண்ணின் பலவீன சின்னம் இரண்டு சொட்டு, கன்னத்தில் உருண்டோடியது. அதை மெல்லப் புறங்கையால் தட்டிவிட்டாள்.

இதோ பார் கௌரி! உனக்கு என்னைத் தெரியும். ஆதலால் நான் எதையுமே மறைக்கப் போவதில்லை. பிறந்தநாள் தொட்டு நாம் பரம ஏழைகள்; இப்போது இரண்டு வருஷமாக அண்ணுவின் உழைப்பினுல் நாம் சிறிது எழும்பிநிற்கிறோம். அதோடு ஒரே தடவையில் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த பெண். கௌரி, எனக்கு கல்லூரியில் படிக்கும்பொழுதே நான் ஒரு "நைலக்ஸ்" சேலையாவது வாங்கவேண்டும்; ஒருமுறையாவது கொழும்பில் போய் வாழவேண்டுமென்று ஆசைப்பட்டுள்ளேன். என்னுடைய எண்ணம் பெரிதானாலும் எண்ணியதில் தவறில்லையே. இவர் கணேஷ் பெரும்பணக்காரர்தான். எனக்கு அவரைப் பற்றி முன்பே தெரியும். பெருங் கஞ்சன்; ஒருசதம் கூட விடாமல் ஒவ்வொரு சதமாகச் சேர்த்து வைத்திருக்கிறார். அவருக்கு இன்னும் பணம்சேர்க்க வேண்டுமென்று ஆசை. தானொரு லட்சாதிபதியாக வேண்டுமென்பதுதான் அவர்கனவு. ஆனால் நானே, ஏழையாய்ப் பிறந்து ஏழையாய் வாழ்ந்து இன்னல்பட்டவள். நான் ஆடம்பரமாக வாழவேண்டுமென்றே, மற்றவர்களைப்போல அரசாங்க ஆபீசர்களைக் கட்டி மகிழவேண்டுமென்றோ எண்ணவில்லை. ஆனால், ஒரு "நைலக்ஸ்" எப்படியிருக்கும், "கொழும்பு கொழும்பு" என்கிறார்களே அது எப்படியிருக்குமெனப்பார்க்க வேண்டும் என்றுதான் எண்ணுகிறேன். விறகு வெட்டியானாலும் என்மனம் நோகாது வாழவைக்கவேண்டும் என்று விரும்புகிறேன். பட்டாடை கட்டி ஆர்ரோம் நடந்து சல்லாபிக்க வேண்டாம். இன்பம் என்பது இதுதான் என்பதை

(3-ம் கலம் பார்க்க)

## பெண்கள் வாழவே முடியாதா?...

— செல்வி ரோஜா சாமுவேல் —

மங்கையராய் உலகினிலே பிறப்பதற்கே
மாதவங்கள் செய்யவேண்டு மென்றார்
முன்னோர்
நங்கையாள் பிறந்தாளென் றின்று கேட்டால்
நலித்திடுவார் கஷ்டமப்பா என உரைப்பார்
விஞ்சுகின்ற திறமையுடன் விளங்கிவிட்டால்
விழலன்றோ!....பெண்ணுக்கேன் புகழோ?...
என்பார்
நஞ்சு நிறை வார்த்தைகளால் நலிய வைப்பார்
நங்கையர்கள் வாழ்ந்திடவே முடியா
தப்பா!...

★

அக்கம் பக்கம் பார்க்காது அடக்கமாக
அணங்கொருத்தி உலகிவரின் அவளைப்
பார்த்து
"பட்டிக்காடு" எனக் கூறி விலக்கிடுவார்
பண்போடு பழக அவள் முன் வந்தாலும்
அச்சம், மடம், நாணமின்றி ஆடுகிறாள்
ஆண்மகனை வளைக்க வழி தேடுகிறாள்
தக்கவளேயல்லள் எனத் தள்ளிடுவார்
தையலர்கள் வாழ்ந்திடவே முடியாதப்பா!..

★

குணமிருந்தால் பணமிருக்கா?...என்று கேட்பார்
குதர்க்கம் பேசிக் குறை பிடித்தேயுடன்
மறுப்பார்
பணமிருந்தும் பண்புடனே வாழ்ந்திடினும்
"கட்டுநிறை அழகில்லை" எனத் துறப்பார்
மனம் விரும்பா ஒருவனுக்கே பெண்மையுள்ளம்
மறுகிடவே மாலையிட நெருக்குவிப்பார்
தினந்தோறும் கண்ணீரில் தவிப்பதல்லால்
தோகையர்கள் வாழ்ந்திடவே முடியா
தப்பா!....

## விட்டுக் கொடுத்து வாழ்வோம்

— தேன்தமிழ் —

சகிப்புத்தன்மை, பொறுமை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்மையாலும் தொட்டதற்கெல்லாம் சினம் கொள்ளுவதாலும் சிலர் அயலவர்களுடன் அடிக்கடி சண்டைபோட்டுக் கொள்ளுகிறார்கள். இதனால் இருசாரருக்கும் ஏற்படும் கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமன்று. இதனை அவர்கள் சிந்திப்பதில்லை. ஆனால் நாம் இவர்களுக்கு என்ன விட்டுக் கொடுப்பதென்ற பிடிவாத மனப்பான்மை பகையை மேலும் மேலும் வளர்க்கிறது.

பெற்றோர்கள் ஒருவரை ஒருவர் கறுவிக்கொள்வதோடு அமையாது குழந்தைகளும் கறுவிக் கொள்கின்றனர். கோபதாபம் நீதிஸ்தலம் வரை செல்கிறது. ஐந்துசதம் பெறுமதியில்லாத சண்டைக்கு நூற்றுக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறார்கள்.

தாய்மார்களே இப்படிச் செல்லும் உங்கள் வழி சரியானதா என்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நேரத்தை மட்டுமா உங்கள் கணவன் குழந்தைகளின் பொன்னான நேரத்தையுமல்லவா மண்ணாக்குகிறீர்கள்.

அயலவரின் சண்டை அயராத தொல்லை. இதை நிறுத்த வாய்ப்பேச்சும் அடிபிடி சண்டையும், நீதிஸ்தலமும் ஒரு நாளும் உதவமாட்டாது. உங்களுக்கு இடைவிடாது தீமைசெய்யும் அயலவர் நெஞ்சத்தை தொடும் வண்ணமும் அவர் நாணும்படியும் நன்மையையேசெய்யுங்கள். இஃது உங்களது பெரும் மோதலை நிறுத்தும். சிறந்த சஞ்சீவியாகப் பயன்படும். இதனால் நீங்கள் ஒரு போதும் தாழ்வடையமாட்டீர்கள். மற்றவர்களால் உயர்வாக மதிக்கப்படுவதுடன் நிம்மதியான வாழ்க்கையையும் நடாத்த முடியும்.

'இன்னு செய்தாரை
ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிட[illegible]
—வள்ளு[illegible]

## முதுமையைப் பற்றி கவலையற்ற நடிகை

நான்முதுமை அடைவதைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. 24 வயதில் இருந்ததைவிட 34-வது வயதில் மிகவும்மகிழ்ச்சியுடன் இருக்கின்றேன். இளமையை எந்தப் பெண்ணுலும் இயற்கைக்கு விரோதமாகக் காப்பாற்றிவிடமுடியாது. —எலிசபெத் டெய்லர்.

ஆணை ஆணுக நடத்துங்கள், ஆண், பெண்ணைப் பெண்ணுக நடத்துவான். —சோபியா லோறன்

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஏழை நான் ஒருநாள் ஒரு கணமாவது அடையவிழைகிறேன். ஆனால் கௌரி, இந்தக் கஞ்சத்தன கணேஷ் தன் பணத்தைப் பார்ப்பாரேயன்றி என் மனத்தைப் பாரார். பிறந்தநாள் தொட்டு இறக்கும்வரை ஏழையாய், பணமிருந்தும் நிறைந்த மணவாழ்வின்றி நான் மாளவேண்டுமா கௌரி? குரல்வளை அடைக்க குமுறிக் குமுறியழுதாள் மலர்.

'வேண்டாமம்மா, வேண்டாம்! நீ எண்ணியது தவ[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு பிரிவுகளிலும் சென்.ஜோன்ஸ் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேக பூர்வமான 1-ம் 2-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் இரண்டிலும் சென்.ஜோன்ஸ் அமோக வெற்றியீட்டியது. முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப்போட்டி மிகவும் விறுவிறுப்பாகக்காணப்பட்டது. ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் ஆட்டம் விறுவிறுப்பாகத்தான் காணப்பட்டது. இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் வீரர்களின் 'பாசிங்' விளையாட்டு ரசிக்கக்கூடியது. இவர்களின் மின்னல் வெட்டுக்கள் எதிர்க்கோஷ்டியைத் திணறவைத்தது. அடுத்தடுத்து சூட்டோடுசூடாக 4 கோல்களைசென்.ஜோன்ஸ் வினாசியது. இக்கோல்களில் 3 கோல்களை ராஜமோகன் வெளுத்து வாங்கினார். மற்றது சிவபாலனால் அடிக்கப்பட்டது. இடைவேளைக்கு முன் எதிர்கோஷ்டி ஒருகோல் பெற்றிருக்கத்தக்கதாக சென்.ஜோன்ஸ் 4 கோல்கள் பெற்றிருந்தது. இடைவேளையின் பின் ஸ்கந்தாவின் விளையாட்டு மெச்சத்தக்கதாக இருந்தது. நிதானமாக ஆடினர். மேலும் ஒரு கோல் போட்டனர். இச்சந்தர்ப்பத்தில் சென்.ஜோன்ஸுக்கு ஒரு 'பனல்டி' கிடைத்தது. அதை அடித்த வாமசீலன் அதை கோலாக்கினர். அந்தோனிப்பிள்ளை என்னும் வீரரும் மேலும் ஒரு கோல் போட்டார். இப்போட்டி முடிவில் சென்.ஜோன்ஸ் 6—2 கோல்களால் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை அமோக வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. மாட்டீன் மத்தியஸ்தம் வகித்தார்.

2-ம் பிரிவு அடுத்து 1-ம் பிரிவுக் கோஷ்டிகள் கடுமையாக மோதிக்கொண்டன. ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் இப்போட்டி ரசிப்பாகக் காணப்பட்டது. இரு கோஷ்டிகளும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் கடுமையாக மோதி ரசிகர்களை உணர்ச்சி வசப்படுத்தின. எனினும் சென். ஜோன்ஸ் சுறுசுறுப்பாக ஆடி இருகோல்களைப்போட்டது. சென். ஜோன்ஸ் முன்னணி வீரர்களான விநாயகமூர்த்தியும், விஜயகுமாரும் இவற்றை உதைத்தனர். இடைவேளையின் போது எதிர்க்கோஷ்டி ஒன்றும் போடாதவகையில் சென். ஜோன்ஸ் இருகோல்கள் போட்டிருந்தது. இடைவேளையின் பின் இருசாராரின் கடுமையான பலப்பரீட்சையினால் போட்டியின் தரம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. ஸ்கந்தாவின் விளையாட்டில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. சென். ஜோன்ஸ் வீரரான விநாயகமூர்த்தி மேலும் ஒரு கோலை துரிதமாகப் போட்டார். இப்போட்டி முடிவில் சென்.ஜோன்ஸ் 3-0 கோல்களால் ஸ்கந்தாவைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தம் வகித்தார். இவ்விரு போட்டிகளும் சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றன.

# 'நொக்கவுட்'சுற்றுப் போட்டியில் குருநகர் யூனைட்டட் வென்றது

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்ட விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விளையாட்டுச்சழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது. இவ்வருடத்துக்கான 10 போட்டிகளில் இருபோட்டிகள் நடைபெற்றுவிட்டன. இச்சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டி யாழ். ஸ்ரேன்சல் விளையாட்டுக்கழகத்துக்கும் குருநகர் 'யுனைட்டட்' விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்றது. பல யாழ். உதைபந்தாட்ட வீரர்களைக் கொண்டிருந்த குருநகர் கோஷ்டி 7-0 கோல்களால் யாழ். ஸ்ரேன்சல் கோஷ்டியை அமோக வெற்றியீட்டியது. இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை ரசிப்பாகக்காணப்பட்டது. குருநகர்கோஷ்டியின் 'பாசிங்' விளையாட்டு பாராட்டக்கூடியது. இடைவேளைக்கு முன் நடந்தபோட்டியில் எதிர்க்கோஷ்டி ஒன்றும்அடிக்காதவகையில் குருநகர் 3 கோல்கள்போட்டது. இடைவேளையின் பின்னரும் குருநகர் நிதானமாக மோதி அநேக கோல்கள் போடும் சந்தர்ப்பங்களைப் பெற்று அவற்றைப்பயன்படுத்தமுயன்றனர். சூட்டோடுசூடாக மேலும் 4 கோல்களை வெளுத்துவாங்கினர் குருநகர்வீரர்கள் எதிர்க் கோஷ்டியின் கோல்காப்பாளர் ரகுநாதன் கூடியளவு நன்ருக ஆடினர். அவரது திறமையினாலேயே எதிர்க்கோஷ்டி மேலும் கோல்கள்போடா வண்ணம் காப்பாற்றப்பட்டன.

## வெற்றியென அறிவிப்பு

நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டிக்கும் யாழ். இரூஸ் கொப்பர்ஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற இருந்த இரண்டாவது போட்டிக்கு கிரூஸ்கொப்பர்ஸ் கோஷ்டி சமூகம்கொடுக்காத காரணத்தினால் சமூகம்கொடுத்த கோஷ்டியான சென்.மேரிஸ்க்குவெற்றிஎன அறிவிக்கப்பட்டது.

—

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

வல்வெட்டித்துறை, செவ்.

அச்சுவேலி பாலிய குற்றவாளிகள் சீர்திருத்தப்பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. பிரதம விருந்தினராக சிறுவர் பரிபாலன சேவைக் கமிஷனர் திரு. ஆர். ஜி. ஜி. ஓ. குணசேகரா கலந்துகொள்வார். திருமதி குணசேகரா வெற்றி வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்குவார்.

—

## தீவுப்பகுதி நெல் செய்கைப் போட்டி

ஊர்காவற்றுறை, செவ்.

ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் நெற்செய்கைப் போட்டி ஒன்றை நடாத்துவதற்கு கமத்தொழிற்பகுதி முயற்சி எடுத்துள்ளது.

தீவுப் பகுதியிலும் இப்போட்டியை நடாத்துவதற்கு உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் முயற்சி எடுத்து வருகிருர். இதற்கான சுவரொட்டி விளம்பரங்கள் கிராம சேவகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பெரும்போகநெற்செய்கை போட்டியில் வெற்றி பெறு பவர்களுக்கு பணப் பரிசு கள் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நினைவு விழாப் பேச்சு

சங்கானை, செவ்வாய்

'அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறிய பின்பு நவாலிக் கிராமத்திற்கும், பொதுமக்களுக்கும் சேவை செய்வதிலேயே தன் முழு நேரத்தையும் செலவிட்ட சமூகத் தொண்டரை நாம் இழந்து விட்டோம். இது எமக்கும் இவ்வூர் மக்களுக்கும் பெரு நஷ்டமாகும், என்று அண்மையில் காலஞ்சென்ற திரு. வி. சைமன் நினைவு தின வைபவத்தில் கலந்து உரையாற்றும் போது வண. பிதா. எஸ். அருளம்பலம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசும்பொழுது மறைந்த பெரியார் சமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியதோடல்லாது பல சங்கங்கள் மூலமும் சேவைகள் செய்தார் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து ஆசிரியர்கள் திரு. ஆ. சிறில், திரு. எஸ். தேவநேசன், திரு. கே. நாகரத்தினம் முதலியோரும் அன்னாரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

—

## சமமான முடிவு

யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டை வை. எம். சி. ஏ. உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும் வண்ணார்பண்ணை தொழில் நுட்பக் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகிதபூர்வமான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது ஆரம்பத்திலிருந்து முடிவுவரையும் இப்போட்டி நன்ருகவேயிருந்தது. இடைவேளையின் போது தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஒரு கோல் பெற்றிருந்தனர். வட்டுக்கோட்டை ஒருகோலும் அடிக்கவில்லை. இடைவேளையின் பின் ஆட்டம் அருமையாக இருந்தது. இரு சாராரும் கடுமையாக மோதினர். தொழில் நுட்பக் கோஷ்டியின் வலது கரை வீரரான ஜி. பாலசிங்கத்தின் விளையாட்டு ரசிக்கக் கூடியது. அவரது மின்னல் வெட்டுகள் எதிர்கோஷ்டியைத் திணறடித்தது. ஆட்டம் முடியும் கடைசி நேரத்தில் தொழில் நுட்பக் கல்லூரி ஒரு கோலை உதைத்தது. இப்போட்டி முடிவில் இருசாராரும் தலா 1—1 கோல்கள் பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர். வைத்தீஸ்வர வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஜெயம் மத்தியஸ்தம் வகித்தார்.

—

## சென் பட்ரிக்ஸ் சென் பெனடிக்ற் நாளை மோதும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ்கல்லூரி உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரி உதை பந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையேயான ஒரு சிநேக பூர்வமான உதை பந்தாட்டப்போட்டி நாளை நடைபெறவிருக்கிறது.

—

## அவரெல் ஹரிமன் இலங்கை விஜயம்

கொழும்பு, செவ்

அமெரிக்க ஜனாதிபதியின் 'சுற்றித்திரியும்' தூதரான திரு. அவரெல் ஹரிமன் அண்மையில் மேற்கொள்ளவிருக்கும் தென்கிழக்கு ஆசியவிஜயத்தின்போது, இலங்கைக்கும் வருவாரெனத் தெரிகிறது.

இவர் அடுத்த மாதம் 27ந் திகதி கொழும்பு வந்து சேருவார். மூன்று நாட்கள் இங்குதங்குவார்.


# 'இந்த தண்டனை பிறருக்கு ஒரு பாடமாக இருக்கவேண்டும்'

## காதை வெட்டிய வழக்கில் நீதிபதியின் எச்சரிக்கை

மாவிட்டபுரம், செவ்.

"ஒருவரின் காதை இன்னொருவர் வெட்டுவதனை நீதிமன்றம் ஒருபோதும் அனுமதிக்காது. நீர் செய்ததைப் போன்று உமக்குச் செய்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பதனைச் சிந்தித்துப் பாரும். உமக்கு இந்த வழக்கில் அளிக்கப்படும் தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்." அலவாங்கால் அடித்தும் அதே ஆயுதத்தால் காதை வெட்டியும் காயம் விளைவித்ததர்க்குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்தியா தண்டனை வழங்குகையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் சங்கானை வடலியடைப்பைச் சேர்ந்த நாகலிங்கம் முத்துக்குமாரு என்பவர் சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த இராமலிங்கம் கனகசபை என்பவரை அலவாங்கால் அடித்து அவருக்குக் காயம் ஏற்படுத்தியதாகவும் அதே நேரத்தில் அலவாங்கால் அவரது காதுக்கு காயம் ஏற்படுத்தியதாகவும் சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் விசாரணையின்பின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி 100 ரூபாய் அபராதமும் ஒரு மாதக் கடுழியச் சிறையும் விதித்துத் தீர்ப்பளித்தார். அபராதம் செலுத்தத் தவறினால் ஆறு வாரம் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் உத்தரவிட்டார். சங்கானைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா வழக்கை நடத்தினர். எதிரி தரப்பில் திரு. சி. எஸ். நாதன் ஆஜரானர்.


சிங்கமார்க்
LION BRAND
குளிர்பானங்களும் பழரசபானங்களும்
பியூர் பெவரேஜஸ் கம்பெனி லிமிட்டெட்
74 ; யூனியன் பிளேஸ்; கொழும்பு -2. C.A.S.

யாழ்ப்பாணம் விற்பனை ஏஜெண்ட் :
என். எம். எஸ்.
மொகிதீன் ஹாஜ்ஜியார் அன் பிறதர்ஸ்
125, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கு விசாரணையின்போது சாட்சி மயங்கி விழுந்தார்

யாழ்ப்பாணம், செவ். எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்த போது சாட்சி மயங்கிவிழுந்தார். இதனுல் விசாரணை 10 நிமிடங்கள் தடைப்பட்டது. இச்சம்பவம் மன்னர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்று நடந்தது.

செருப்பால் அடித்துக் காயப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு மன்னுர் மாஜிஸ்டிரேட் திரு. வரமகுரு முன்னிலையில் நேற்றுக் காலை விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 65-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ம் திகதி மன்னுர் சின்னக்கடையைச் சேர்ந்த எஸ். அன்ரனி லெஞட்டை அடித்துக் காயப்படுத்தியதாக சார் ஜன்ட்குலாத், அருளப்புஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் சிமான் பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

வழக்காளி சார்பில் அட்வகேட் சேதுகாவலர் புறக்டர் எஸ். வரமகுருவின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

அன்ரனி லெஞட் சாட்சியமளித்தபோது கூறியதாவது: சம்பவம் நடந்ததினம் எனது தகப்பனுர் பணம் தந்து வவனியாவிற்கு செல்லும்படி கூறினுர். நான் மன்னுர் பாபர் சலூன் அருகில் சென்றேன். அப்பொழுது 1-வது எதிரி 'அடே நில்லடா' என்று கத்தி[illegible] "வழக்கில் வெற்றி[illegible]விட்டியா இந்த இடத்தி[illegible] நீ பெரிய புள்ளி என நினைத்திருக்கிருய்" என்று காலில் இருந்த செருப்பைக் கழட்டி அடித்தார். அப்பொழுது இரண்டாவது எதிரி அருளப்பு என்னைக் கட்டிப்பிடித்தார். நான் கீழேவிழுந்தபின் அவர் பலமுறை அடித்தார்.

எதிரியின் வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதன் "செருப்பால் இருமுறை அடித்ததாக பொலிஸாரிடம் கூறினீரா?" என்று கேட்டதும் சாட்சி மயங்கிவிழுந்தார். மயக்கம் தெளிந்ததும் மீண்டும் குறுக்கு விசாரணை நடந்தது.

மாஜிஸ்டிரேட் விசாரணையை டிசம்பர் 15-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## எச். என். ஜி. பெர்னுண்டோ புதிய பிரதம நீதியரசர்?

கொழும்பு, திங்கள் பிரதம நீதியரசராகக் கடந்த ஆகஸ்ட் 3ல் தெரிவு செய்யப்பட்ட நீதியரசர் திரு. எம் ஸி சன்ஸோனி, அப்பதவியிலிருந்து ஓய்வு எடுத்துக்கொள்ளும் முகமாக நவம்பர் 1-ந் திகதியிலிருந்து 17-ந் திகதி வரை லீவில் இருப்பார்.

அவருடைய பதவிக்கு அடுத்து நியமிக்கப்பட இருப்பவர் நீதியரசர் திரு எச் என் ஜி பெர்னுண்டோ ஆவர் வெள்ளிக்கிழமை நவம்பர் 18-ந் திகதியன்று திரு எச் என் ஜி பெர்னுண்டோ பிரதம நீதியரசராக சத்தியப்பிரமாணஞ் செய்யப்படுவாரெனத் தெரிகிறது.

## பிரபல திருமண நிச்சயார்த்தம்

கொழும்பு, திங். திவுப்பகுதி முன்னுள் எம். பி.யும் கொழும்பு பிரபல வர்த்தகரும் கப்பல் சரக்கு விநியோகம் செய்யும் கம்பெனியின் சபைத் தலைவருமான திரு. ஏ. எல். தம்பி ஐயா அவர்களின் புதல்வன் திரு. சிவாந்த ஜயந்திநாதன் தம்பி ஐயாவுக்கும் மேன்மை தங்கிய பர்துவான் மகராஜா மகராஜ் அதிராஜ் பகதூர் உதேசாந்தி மாதாப் அவர்களின் புதல்வி மகராஜ் குமாரி கருணுதேவிக்கும்இன்று காலை திரு.ஏ.எல். தம்பி ஐயாஇல்லத்தில் விவாக நிச்சயார்த்தம் நடைபெற்றது.

நாளைமறுதினம் புதன் கிழமை இரவு ஏழு மணிக்கு திரு. ஏ. எல். தம்பி ஐயாவீட்டில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

## யுதாண்ட் பாராட்டு

நியுயோர்க், அக். 24 ஐ. நா.வின் 21-வது வருடாந்த விழாவில் நேற்று இந்திய பாடகியான திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி இசைக் கச்சேரியொன்றை நிகழ்த்தினுர். மகாசபைத் தலைவர், பொதுக் காரியதரிசி ஆகியோர் உட்பட சுமார் 1200 பேர் கச்சேரியைக் கேட்டனர்.

இடைவேளையின் போது திருமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் இசைநிகழ்ச்சியை யுதாண்ட் பாராட்டிப் பேசினுர். வடக்கத்திய தெற்கத்திய சாகித்தியங்கள் உட்பட பல பக்திப்பாடல்களையும் அவர் பாராட்டினுர்.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், திங்கள் பொலிசாரைத் தாக்கியதாகவும் அவர்களைக் கடமை செய்யவிடாமல் தடுத்ததாகவும்குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக வழக்கை மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா அடுத்தமாதம் முதலாம் திகதி ஒத்திவைத்துள்ளார்.

இவ்வழக்கில் சுழிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்தவர்களான சுப்பிரமணியம் தம்பிநயினுர். இராமசாமி ஜயபாலன். சபாபதி செல்வத்துரை, எஸ். சின்னத்தம்பி ஆகிய நால்வரும் சென்ற மே மாதம் 22-ந் திகதி சங்கானைப் பொலிஸ் கான்ஸ்டபிள்களான விக்கிரமசிங்காவையும், பீரிசையும் அவர்களது உத்தியோக பூர்வமான கடமைகளைச் செய்யவிடாமல் தடுத்ததாகவும், இரு கான்ஸ்டபிள்களையும் நான்கு எதிகளும் தாக்கியதாகவும், முதலாம் எதிரி விக்கிரமசிங்காவைத் தாக்கியதாகவும், விக்கிரமசிங்காவின் பாதுகாப்பிலிருந்து 1-ம் எதிரி தப்பி ஓடியதாகவும், அவர் தப்பி ஓட மற்றைய மூன்று எதிரிகளும் அவருக்கு உடந்தையாக இருந்ததாகவும் எல்லாமாக 5 குற்றங்கள் சாட்டி சங்கானைப் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்கள்.

### தேவை

புத்தகம் கட்டுவோர்: புத்தகம் கட்டுவதில் (பைண்டிங்) எல்லாவித வேலைகளும் தெரிந்த ஒருவரும், வேலை பழகுவோர் மூவரும் தேவை. ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

### நிருபர்கள் தேவை

'ஈழநாடு' பத்திரிகைக்கு பின்வரும் இடங்களில் செய்திநிருபர்கள்தேவை. பத்திரிகைத்துறை அனுபவம் விசேஷ தகைமையாகக் கணிக்கப்படும்.

புன்னலைக்கட்டுவன்,
சுன்னுகம்,
மானிப்பாய்,
காரைநகர்,
புங்குடுதீவு,
நயினுதீவு,
மாங்குளம்,
செட்டிகுளம்,
முருங்கன்,
திருக்கேதீஸ்வரம்,
மதவாச்சி,
அனுராதபுரம்,
பளை,
கோப்பாய்,
உடும்பராய்,
பூநகரி.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
செய்திஆசிரியர்,
த.பெ.எண்49,
யாழ்ப்பாணம்.

**ஆஸ்திரேலிய உதவியுடன்**

## பண்டாரவளையில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை

கொஸ்லாந்தை, செவ். பண்டாரவளை மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையை விருத்திசெய்யும்பொருட்டு அவுஸ்திரேலிய அரசாங்கம் 500 தொன் உருளைக்கிழங்கு விதையை அன்பளிப்பாக கொடுத்துதவ இருக்கிறது.

அடுத்த வருடம் மார்ச்—ஏப்ரல் மாதத்தில் இங்கு வந்து சேரும் இவ்விதைகளை சிறந்த இடங்களில் பயிரிடச் செய்ய போதிய இடவசதிகளையும் உபகரண உரவசதிகளையும் கொடுக்க குடுத்தலாறு உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக் குழுப் பகுதி விரிவான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

### பெற்ரோர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

உடுப்பிட்டி, செவ்வாய் இம்மாதம் 15-ந்திகதி நடைபெற்ற வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி பெற்ரோர்- ஆசிரிய சங்க வருடாந்தக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் இக்கல்லூரிக்கு சிங்கள ஆசிரியரை நியமிக்கும் விஷயமாக நிச்சயிப்பதற்கென வரும் வியாழக்கிழமை பி. ப. 4-30மணிக்கு விசேஷபொதுக்கூட்டம் நடைபெறுமென மேற்படி சங்கச் செயலாளர்திரு. ஆ. வே. வேற்பிள்ளை அறிவித்துள்ளார்.

### மரண அறிவித்தல்

**அல்வினஸ்**

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஸ்தாபன ஆபிசரும், சமாதான நீதவானும், செயின்ட் பட்ரிக்ஸ் கல்லூரியின் ஒய்வு பெற்ற ஆசிரியருமான கொஸ்மஸ் W. D. அல்வினஸ் அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னரது பூதவுடல் யாழ்ப்பாண செயின்ட் மேரிசேமக்காலத்திற்கு அக்டோபர் 28-ந் திகதி வெள்ளிக்கிழமை நல்லடக்கத்திற்காக 111/4, கடற்கரை வீதி யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 5-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். 1451




மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது. இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர் மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிருர்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org